# திருமலைத்தீபம்

# THIRUMALAI THEEPAM

எழுந்து ஒளி வீசு

நம்பிக்கை ஆண்டு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

தை ~ மாசி இதழ் ~ 2013. ஆரம்பம் 15~மாசி~2013. மறைக்கல்வி நடுநிலையம்,டொக்கியாட் வீதி, திருகோணமலை. தீபம்~01, சுடர்~01. விலை~20/=

Email:-catetcota@gmail.com

TP:-026 2221022,0779797230

## ஆயரின் ஆசிச் செய்தி.......



நம்பிக்கை ஆண்டில் (2013) அடியெடுத்து வைத்துள்ளோம். இந்த வேளை எம் புதிய மறை மாவட்டத்திலிருந்து இறை எண்ணங்களை, இறைமக்களின் சிந்தனைகளை எல்லோருக்கும் அறியப்பண்ணும் ஒரு புதிய ஊடகமாக வெளிவரும் **திருமலைத்தீபம்** என்னும் இப்புதிய சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாநிலச் செய்திகளோடு மாணவர், வளர்ந்தோர், குடும்பத்தவர் போன்ற அனைவரின் மறையறிவை மென்மேலும் உயர்த்திடத்தக்கதான ஆக்கங்கள் இதில் இடம்பெறுவது அவசியம் என்பதோடு, அவ்வாறான ஆக்கங்களை தாங்களாகவே உருவாக்கி வழங்கி தங்கள் மறை ஆற்றல்களை மற்றவர்களுக்கும் வழங்கி பலன் பெறச்செய்வதும் ஒவ்வொருவரின் கடமையாகும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

இச்சஞ்சிகையை ஒவ்வொரு குடும்பமும் வாங்கிப் படித்து பயன்பெறுவதோடு, மற்றவர்களையும் வாங்கிப் படிக்கத் தூண்டுவதோடு, இதன் வளர்ச்சியில் நீங்களும் ஒத்துழைத்து உதவ முன்வர வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

இந்த முயற்சியில் முன்னின்று உழைக்கும் திருகோணமலை மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தினரையும், ஊடக தொடர்பு நிலையத்தினரையும் மனதார வாழ்த்தி இவர்களது முயற்சி விசுவாசத்திற்கும், கிறிஸ்தவ வாழ்விற்கும் உரமூட்டி வளர்க்க இறைவனை வேண்டுகிறேன்.

**மறை மாநில ஆயர் அதி.வந்.கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**
**திருகோணமலை மறைமாவட்டம்**

## குருமுதல்வரின் ஆசிச் செய்தி.....



திருகோணமலை மறை மாவட்டத்தின் கன்னிப் படைப்பான **திருமலைத்தீபம்** என்ற பத்திரிகை முதல் பிரதி வெளிவருகின்ற இந்த வேளை பெருமகிழ்வுடன் இவ்வரிகளை வரைகின்றேன்.

உலகமே ஊராகச் சுருங்கிவிட்ட காலம் இது. உலகின் ஒரு மூலையில் நிகழ்கின்ற காரியங்கள் ஒரு சில மணித்துளிகளில் எல்லா இடத்திற்கும் ஒலியாகவும் ஒளியாகவும் பரவி விடும் காலம் இது. தினத்தாள்களைப் பார்த்துச் செய்திகளைத் தெரிந்து கொள்வதை ஏற்காத காலமும்கூட இது. மின் அஞ்சல், தொலைபேசி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் வழியாக செய்திகளைப் பெறுவதே இன்றைய நாகரீகமாக உள்ளது.

இப்பின்னணியிலும் கூட அச்சு ஊடகம் வழியாக வருகின்ற பத்திரிகை சஞ்சிகை போன்றவை இன்றும் வலிமை வாய்ந்தவையாகவே உள்ளன. சாதாரண மக்களை இலகுவில் மற்றும் குறைந்த செலவில் சென்றடையக் கூடிய வாய்ப்பு வரும் போதெல்லாம் மிக எளிதில் மீண்டும் மீண்டும் பார்த்து அறிவை ஆழமாக்கக்கூடிய ஊடகமாகவே பத்திரிகையை நாம் காண்கிறோம்.

**தொடர்ச்சி 5ம் பக்கம் ...**

## ஆயரின் பிரதிநிதியின் ஆசிச்செய்தி .....



எமது மறை மாவட்டத்திற்கென **'திருமலைத்தீபம்'** எனும் பெயரில் புதிய பத்திரிகை வெளியாகுவதையிட்டு மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறேன். எமது மறைமாவட்டத்திற்கென தனித்த பத்திரிகையொன்றை நாம் பிரசுரிக்க வேண்டுமெனும் ஆர்வமும், விருப்பமும் அனைவர் உள்ளங்களிலும் இருந்தது. இதற்கு செயல் வடிவம் கொடுக்க பலரும் தமது கருத்துக்களை வெளியிட்டு உதவியுள்ளனர்.

அனைவரையும் நான் பாராட்டுகிறேன்.

விசுவாசிகளின் ஆன்மீக வளர்ச்சியில் ஒரு கத்தோலிக்கப் பத்திரிகை பெரும் பங்களிப்புசெய்யும் என்பதில் ஐயமில்லை. குழந்தைகள், மாணவர்கள், இளைஞர்கள், குடும்பம், முதியவர் என்று அனைவரையும் கவரும் வண்ணம் எமது கத்தோலிக்கப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. பலரும் தமது கருத்துக்களையும், ஆன்மீக அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள இது போன்ற பத்திரிகைகள் உதவுகின்றன என்பது தெளிவு.

**தொடர்ச்சி 5 பக்கம் ........**

## 'திருமலைத்தீபம்' சின்னம் காட்டும் அடையாளங்களும் விளக்கங்களும்



**திருவிவிலியம்**

**சிலுவை**

**தூயஆவி**

**திருவழிபாட்டு நிறங்கள்**

**நெற்கதிர் மலை தீபம்**

வார்த்தை மனுவுருவாகியவர்,
கல்வாரி மலையில் எம்மை மீட்டு,
தூய ஆவியினால், எம்மை ஒவ்வொரு
வழிபாட்டுக் காலங்களிலும், நாம்
வாழும் பிரதேசத்தில் ஒளியாக
பிரகாசிக்கச் செய்கிறார்.

## திருத்தந்தை இராஜினாமா செய்கிறார்



திருத்தந்தை 16வது ஆசீர்வாதப்பார் 28.02.2013 இரவு 8.00 மணிக்கு தம் தலைமைத்துவ பணியிலிருந்து இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

மார்ச் மாதம் 31ஆம் திகதி புதிய திருத்தந்தை தெரிவு

அடுத்த இதழில் மேலதிக தகவலுடன் சந்திப்போம்.

## திருமலைத்தீப அன்பு நெஞ்சங்களே !

உங்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றியைக் கூறிக்கொள்கிறோம். மேலும் உங்கள் தரமான ஆக்கங்களையும், பிறந்தநாள், திருமணநாள், உறவினர்களின் இறந்தநினைவு நாட்களையும் ஒரு மாதத்திற்கு முன்னே அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆசிரியர்:- அருட்பணி. S.மதுராங்கன் குரூஸ்**

## மறைந்த ஆயர் மேதகு எல் ஆர்.அன்ரனி ஆண்டகை







மேதகு.எல்.ஆர்.அன்ரனி ஆண்டகை கடந்த ஆண்டு (2012) மார்கழி 03ம் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் பாதம் சென்றடைந்தார். இவர் யாழ் ஊர்காவற்துறை கரம்பனில் எண்பத்தாறு வருடங்களுக்கு முன் 1927 ஏப்ரல் 10ம் திகதி பிறந்தார். ஊர்காவற்துறை தூயஅந்தோனியார். கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், உயர்கல்வியை யாழ் தூயபற்றிக் கல்லூரியிலும் தொடர்ந்தார்.

இறைபணியை மேற்கொள்ளதனது 13வது வயதில் தூய மார்டீன் ஆரம்ப குருமடத்தில் சேர்ந்துபயிற்சிபெற்று கொழும்பு பொரளை உயர் குருமடத்தில் மேற்படிப் பைத் தொடர்ந்தார். பின்பு உரோம் நகரில் 1954ம் ஆண்டு டிசம்பர் 07ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

திருமலைமறைமாவட்டத்தில் ஆயராகப் பணியாற்றிய மேதகு ஆயர் இக்னேஷியஸ் கிளனி அவர்களின் செயலாளராக 1958 இல் பணியாற்றி யாழ்.சென் மேரிஸ் பேராலயத்தில் பங்குத்தந்தையாக 1966இல் நியமிக்கப்பட்டார்.1968ல் யாழ் ஆயர் மேதகு எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் துணைஆயராக இருந்து பணியாற்றிய பின் 1974இல் திருமலை,மட்டுநகர் மேதகு ஆயராக நியமனம் செய்யப்பட்டார். தொடர்ந்து பணியாற்றும் வேளை ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாக 1983இல் தம் பணியில் ஓய்வினைப்பெற்றார்.

திருமலை – மட்டுநகர் மறைமாநிலத்தில் ஆயராகப் பணிபுரிந்தவேளை குருக்களாக பதினொரு பேரை திருநிலைப்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். 1983ல் ஓய்வுபெற்றதும் திருமலை ஆயர் இல்லத்தில் தங்கியிருந்த ஆயர் அவர்கள் 03-12-2012 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது நல்லடக்கம் 06-12-2012 காலை 10மணிக்கு திருமலை புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்றது.

தகவல்: **திருமதி ஆஞ்சலின் சுப்பிரமணியம் (பேராலயம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு அவரிடம் நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய் என நான் உன்னிடம் கூறவில்லையா என்று கேட்டார்..(யோவா 11:40)

# கருத்தோவியம்

## நம்பிக்கையுடன் உங்களோடு.......

"...நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய்..."(யோவா 11:40) என்ற 2013ம் ஆண்டுக்கான ஆசீர்வாத இறைவார்த்தையோடு ..."**திருமலைத்தீபம்**" என்ற மாதாந்த பத்திரிகையூடாக இந்த நம்பிக்கை ஆண்டில் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

**நம்பிக்கை தான் விளக்கு,**
**இரு கண்ணிழந்த நமக்கு,**
**ஆதி மனிதன் கடலைக்கண்டு பயந்ததுமுண்டு ,**
**துணிந்த மனிதன் கடலை வென்றதுமுண்டு.**
**பயந்த மனிதன் கரையிலேயே நின்றான்,**
**துணிந்த மனிதன் கடலை வென்றான்.**

ஒரு புறம் பிரிவினைவாதம், இனவாதம் தொடங்கிய காலம் தொட்டு இந்நாள்வரை தமிழ் மக்கள் ஆட்சியாளர்களினால் ஏமாற்றப்பட்டு, சூறையாடப்பட்டு எல்லாம் இழந்த நிலையில் நம்பிக்கையின்றி நாளையும், பொழுதையும் தாம் கண்ணால் காணாத கடவுளை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

மறுபுறம் மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல அண்மைக்காலங்களில் ஏற்பட்ட வெள்ளமும், வறுமையும் ஏன் வாழவேண்டும். இப் பூமியில் என மனித வாழ்வில் நம்பிக்கையை இழக்கச் செய்கிறது.

யாரிடம் செல்வோம்? யாரை நம்புவோம்? என்று ஏங்கித் தவிப்போருக்கு இரு கரம் விரித்தவரை இயேசு என்னிடம் வா மகளே ,மகனே என்று அழைக்கிறார்.

**ஆள்பவன் காப்பான்,**
**அடுத்தவன் காப்பான்,**
**உற்றவன் காப்பான்,**

என்று மற்றவரிலே நம்பிக்கை வைப்பதை விட, மீண்டும் ஒருநாள் வர இருக்கும் இயேசு ஆண்டவரை நம்புவோம். ஆண்டவரே நான்கு நாள் ஆயிற்று நாற்றம் அடிக்குமே என்று மார்த்தா நம்பிக்கை இழந்து கூறினார். இயேசு அவரிடம் நம்பினால் நாற்றம் நறுமணம் ஆகும் என்றார். இலாசர் உயிர் பெற்றார் (யோவா11:39-44).

நம்மைச் சுற்றி எல்லா பக்கமும் என்ன நடந்தாலும் இயேசுவை ஆழமாக நம்புவோம். இறைவார்த்தையில், நற்கருணையில் ஊன்றியிருப்பவர்களாக இந்த 2013ம் ஆண்டிலே எதிர்நோக்கோடு பயணிப்போம்.

**தினமும் இவ்வாறு சொல்லுவோம்**
**நான் நம்புகின்றேன் இயேசுவே, நான் மாட்சிமையைக் காண்பேன்.**

**ஆசிரியர்:- அருட்தந்தை. S. மதுராங்கன் குரூஸ்**



## திருகோணமலை மறை மாவட்டத்தில் நற்கருணைப் பணியாளர்கள் பணியேற்கும் சடங்கு


திருகோணமலையில் இரண்டாந் தடவையாக நற்கருணைப் பணியாளர்கள் தம் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்கள். திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டமென்று சேர்ந்து பணியாற்றிய போது உருவாக்கப்பட்ட நற்கருணைப் பணியாளர்கள் தற்போது திருகோணமலை மறைமாவட்ட மென்று தனித்து இயங்கும் போது 06 நற்கருணைப் பணியாளர்கள் கடந்த 16.11.2012 அன்று தம் பொறுப்பினை ஏற்றார்கள் இவர்களுக்கான விசேட திருப்பலி உவர்மலை குழந்தை இயேசு ஆலயத்தில் ஆயர் அதி.வந்.கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. ஆயரின் பிரதிநிதி அருட்பணி நோயல் இம்மானுவேல் அவர்களும், குருமுதல்வர் அருட்பணி ரி.கிங்ஸ்லிறொபட் அவர்களும், மற்றும் உவர்மலை குழந்தை இயேசு ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி I. யூட்சர்வானந்தன் உட்பட 07 அருட்சகோதரிகளும், இணைந்து கொண்டனர்.

அனைத்துப் பங்குகளிலும் இருந்து வருகை தந்திருந்த இறைமக்கள் நற்கருணைப்பணியாளர்களுக்காக தம் செபங்களில் வேண்டிக் கொண்டார்கள். இத்திருப்பலியினை திருவழிபாட்டிற்கு பொறுப்பாய் பணியாற்றுகின்ற அருட்பணி S.அந்திரியாஸ் பெர்ணாண்டே (அ.ம.தி) அவர்கள் ஒழுங்கமைத்து நெறிப்படுத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**இந் நற்கருணைப் பணியாளர்களை மறைமாவட்டம் வாழ்த்துகின்றது**

## பாதர் சொல்லும் கதை

ஓர் கிராமத்தில் தங்களுடைய பழைய ஆலயம் இடிந்து விழுந்திடும் என்ற பயத்தில், ஆலய நிர்வாகம் கூடி நான்கு தீர்மானங்கள் எடுத்தன.



1. ஆலயத்தை இடிப்பதை ஆலய நிர்வாகம் வருத்தத்துடன் ஏற்றுக்கொள்கிறது.
2. இதற்குப் பதிலாக இன்னொரு ஆலயம் கட்டுவது.
3. பழைய ஆலய அத்திவாரத்தை அப்படியே வைத்துவிட்டு, பழைய ஆலயத்தின் கதவு, செங்கல் போன்றவற்றை புது ஆலயத்திற்குப் பயன்படுத்துவது. (இதுவரைக்கும் சரி.........)
4. புதிய கோவிலை கட்டி முடிக்கும் வரைக்கும் பழைய கோவிலை இடிப்பதில்லை


*How is it?...* (இது எப்படி இருக்கு?...)

பழையதை இடிக்காத வரைக்கும் புதியதை எப்படிக் கட்டுவது?. நாம் வாழ்க்கையில் முன்னேற எது தடையாக இருக்கிறதோ. அதை விட்டுவிட நாம் தயாரில்லையென்றால் எப்படி முன்னேறுவது?

**'அவரோடு இணைந்திருக்கும் எவரும் பாவம் செய்வதில்லை. பாவம் செய்பவர் எவரும் அவரைக் கண்டதுமில்லை அறிந்ததுமில்லை.' (1 யோவா 3:6)**

**ஆசிரியர்:- அருட்பணி.S.மதுராங்கன் குரூஸ்**

## பொதுநிலையினருக்கான தலைமைத்துவ கருத்தரங்கு பெங்களூர்





கடந்த 09.01.2013 - 16.01.2013வரை **பெங்களூர்** தேசிய விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடு நிலையத்தில் **(NBCLC)** பொது நிலையினருக்கான தலைமைத்துவ கருத்தரங்கு இடம்பெற்றது.

இக்கருத்தரங்கிற்கு திருகோணமலை மறை மாவட்டத்தில் இருந்து 05 பேர் தெரிவு செய்யப் பட்டு பங்கு கொண்டு பயன்பெற்றனர்.

**திரு.சுப்ரமணியம். டினேஸ்குமார் (குவாடலூப்பே), திரு.இருதயம் யேசுராஜ் (அலஸ்தோட்டம்), திருமதி.P.R.ரீட்டா பெர்னான்டோ (பாலையூற்று), திருமதி சரோஜா சதாசிவம் (மூதூர்), செல்வி கியூரி கணேசபிள்ளை (உவர்மலை)** ஆகியோரே இக் கருத்தரங்கில் பங்குபற்றியவர்களாவர்.

386வது கருத்தரங்காக இடம் பெற்ற இந்த தேசிய கருத்தரங்கின் மையப் பொருளாக அமைந்தது சங்க ஏடு. **இரண்டாம் வத்திக்கான் சங்க ஒளியில் பொதுநிலையினரின் தலைமைத்துவம் என்பதே மையக்கருத்தின் தலைப்பாக அமைந்தது.**

இந்தியாவின் 14 மாநிலங்களில் இருந்தும், இலங் கையில் 58 பொதுநிலையினர் பங்கு கொண்ட இக்கருத்தரங்கை 03 குருக்கள் உட்பட 09 நெறி யாளர்கள் நெறிப்படுத்தினார்கள். 52 அமர்வு களாக இடம் பெற்ற இக்கருத்தரங்கு 16 ஏடுக ளையும் தெளிவுபடுத் தியது.

குறிப்பிட்ட இந்த ஒரு வாரக் காலப்பகுதியில், பல்வேறு நபர்கள், பல தரப்பட்ட அனுபவங் கள், தமிழ்க் கலாசார த்தை மையப்படுத்தும் திருப்பலிகள் பொங்கல் திருப்பலி, வேறுபட்ட மொழிப்பிரயோகங்கள் என்று பலவற்றைக் கற்றுக் கொண்டதுடன் அறிவையும் பெற்றுக் கொண்டோம்.

கருத்தரங்கின் இறுதிநாள் நிகழ்வில் நன்றி யுரைகள் பல நிகழ்த்தப்பட்டு சான்றிதழும் வழங்கப்பட்டு மதிய உணவுடன் நிகழ்வுகள் நிறைவேறின.

ஏனைய மூன்று நாட்களிலும் புனித ஸ்தலங் கள், திருத்தலங்களை தரிசித்து திருப்பலி களில் பங்கு கொண்டு 20.01.2013ல் மீண்டும் இலங்கை மண்ணை வந்தடைந்தோம்.

மேற்குறிப்பிட்ட இந்நிகழ்வுகள் அனைத் தையும் ஆயரின் அனுமதியுடன் முன்னி ன்று வெற்றிகரமாகவும், எவ்விதமான சிரமங் களும் இல்லாமல் ஒழுங்கு முறையாகவும், இலவசமாகவும் நிறைவேற்றித் தந்தவர் ஆயரின் பிரதிநிதி அருட்பணி நோயல் இம்மானுவேல் அவர்கள்

**'அனைத்திலும் கூடவே இருந்த இறைவனுக்கு நன்றிகள்.'**

தகவல்:-பெங்களூர் குழு

## திருகோணமலை மறைமாவட்ட குருக்களுக்கான ஞானஒடுக்கம்

எதிர்வரும் 17.02.2013 -23.02.2013 வரை குருக்களுக்கான ஞானஒடுக்கம் இடம் பெறவுள்ளது. இந்த ஞானஒடுக்கமானது குருநாகல் மறைமாவட்டத்திற்கு சொந்த மான கலஹா என்னுமிடத்தில் அமைந் துள்ள தியான இல்லத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த ஞானஒடுக்க நாட்களை குருக்கள் ஆயரோடு இணைந்து தமது குருத்துவ அழைத்தலையும், பணியையும் ஆன்மீக வாழ்வையும் ஆழமாக தியானிக்க அழைக்கப்படுகின்றார்கள்.

எனவே குருக்களின் இந்த ஞானஒடுக்கம் வெற்றி பெற திருமலைத்தீபம் தன் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

## ஆயரின் காரியாலயத் திறப்பு விழா

கடந்த 17.01.2013 அன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு உவர்மலை ஆயர் இல்லத்தில் ஆயருக்கான காரியாலயம் ஒன்று திறக்கப்பட்டது. இந்த காரியாலயத்தை அதி. வந்தனைக்குரிய ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் ஆசிர்வதித்து திறந்துவைத்தார்கள். கடந்த வருடம் புரட்டாதி மாதம் இந்தக் காரியாலய வேலைகள் மேற் கொள்ளப்பட்டாலும் தொடர்ச்சியான மழை காரணமாக இதன் பணிகள் தாமதப் படுத்தப் பட்டது என்பதும் முக்கிய விடயமாகும்.

**திங்கள் முதல் வெள்ளிவரை ஆயர் தனது பணிகளை இக்காரியாலயத்தில் மேற்கொள்வார் என்பதையும் அறியத்தருகின்றோம்.**

**ஆயர் இல்லம்**

## தேவ அழைத்தல் கருத்தரங்கு (பெண்களுக்கு)

திருகோணமலை மறைமாவட்டத்தின் ஏற்பாட்டில் கடந்த 12.01.2013 அன்று சனிக்கிழமை உப்புவெளி மேய்ப்புப்பணி நிலையத்தில் இந்த தேவஅழைத்தல் கருத்தரங்கு இடம்பெற்றது. காலை 9.00மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமான இந்த கருத்தரங்கில் எமது மறைமாவட்டத்தில் உள்ள 06 துறவற சபைகளில் இருந்து 15 அருட்சகோதரிகள் வருகை தந்ததுடன் 11 பங்குகளிலுமிருந்து 75 பெண்பிள்ளைகள் சமூகமளித்துப் பயன் பெற்றனர் ஆரம்ப நிகழ்வாக இடம் பெற்ற திருப்பலியின் பின் தேவஅழைத்தல் தொடர்பான உரை நிகழ்த்தப்பட்டது. இந்த உரையானது விவிலியத்தில் அழைத்தல் பெற்ற பலருடைய வெளிப்பாடுகளை உதாரணமாக்கி இன்றைய சூழலில் பெண்களின் பணிபற்றியும் வழங்கப்பட்டது.

தேநீர் இடைவேளையின் பின் பங்குபற்றியிருந்த பெண் பிள்ளைகள் 06 குழுக்களாக பிரித்து 06 துறவறசபையைச் சேர்ந்த அருட்சகோதரிகளைச் சந்தித்து உரையாடியதுடன் தொடர்ந்து இடம் பெற்ற மதிய உணவின் பின் விவிலிய போட்டிகளும் விவிலிய விளையாட்டுக்களும் இடம்பெற்றன. இறுதியாக ஆயரின் ஆசிருடன் மாலை 04.00மணிக்கு நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவேறின

தகவல் : ஆயர் இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பணி A. நவாஜி

# நம்பிக்கையை அறிந்து, வாழ்ந்து, வழங்குவோம்

### நம்பிக்கை ஆண்டின் அழைப்பும், நோக்கமும்

நம் திருத்தந்தை 16ம் பெனடிக் 11.10.2012 – 24.11.2013 வரையிலான காலப்பகுதியினை நம்பிக்கையின் (விசுவாசத்தின்) ஆண்டாக பிரகடனம் செய்துள்ளார். இவ்வாறு அறிவித்துள்ள திருத்தந்தையவர்கள் அதற்கு உதவியாக 'நம்பிக்கையின் வாயில்' (The Door of Faith – PORTA FIDEI) எனும் திருத்தூது மடலினை (Apostolic Letter) வெளியீடு செய்துள்ளார். இதற்குதவியாக திருத்தந்தையவர்கள் கடந்த 16.10.2011ல் வத்திக்கானில் 'புதிய நற்செய்தி அறிவிப்பு' மாநாட்டில் கலந்துகொண்டு திருப்பலி நிறைவேற்றினார். அப்போது வரும் 11.10.2012 – 24.11.2013 வரையிலான காலகட்டத்தை நம்பிக்கை ஆண்டாக கொண்டாட வேண்டுமென அழைப்பு விடுத்தார். அதன் வெளிப்பாடுதான் இன்று முழுத்திருச்சபையெங்கும் கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கும் நம்பிக்கை ஆண்டாகும்.

இந்த நம்பிக்கையாண்டில் 'நம்பிக்கை என்பது ஒரு கொடையென்று அறிந்து, கடவுளோடு கொள்ளும் உறவில் அழம் கண்டு, பிறரோடுதான் கொண்டுள்ள இறைநம்பிக்கையைப் பகிர்ந்து கொள்ளும் அர்ப்பணத்தை உறுதிப்படுத்த வேண்டும்'. திருத்தந்தையவர்கள் தமது மறையுரையில் நம்பிக்கை ஆண்டானது:

1. அருளின் காலமாகவும், அர்ப்பணத்தின் காலமாகவும் அமைகின்றது
2. கடவுளிடம் முழுமனதுடன் திரும்பிவந்து அவரில் கொண்டுள்ள நம்பிக்கையை அழப்படுத்தும் காலமாகவும் அமைகின்றது
3. மிகுந்த மகிழ்ச்சியுடன் இறைவனின் மீட்புத்திட்டத்தை அறிக்கையிட்டு புத்துலகம் படைக்கும் காலமாகவும் அமைந்துள்ளது என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

### நம்பிக்கை என்றால் என்ன?

திருத்தந்தையவர்கள் தனது திருத்தூது மடலில் 'இறைவனோடு உறவு கொள்ளவும், திருச்சபையினுள் நுழையவும் வகைசெய்யும் நம்பிக்கையின் கதவு எப்போதும் திறந்தே உள்ளது' (நம்பிக்கையின் வாயில் இல. 01) எனக்கூறி நம்பிக்கை வாழ்விற்கு அனைவரையும் அழைக்கின்றார். மேலும் அவர் நம்பிக்கையை அறிக்கையிடுதல் என்பது 'தந்தை, மகன், தூய ஆவியாகிய அன்பே உருவான மூவொரு இறைவனை நம்புவதாகும்' என்று பறைசாற்றுகின்றார். அத்துடன் நம்பிக்கையென்பது 'ஆண்டவரோடு நிற்கவும், அவரோடு வாழவும் எடுக்கும் நிலைப்பாடு ஆகும். இந்த அவரோடு நிற்பது நம்புவதற்கு ஒரு காரணமாகும்' (ந. வா. இல. 09) என்று தெளிவாக கூறுகின்றார்.

### நம்பிக்கை ஆண்டும் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வியும்

நம்பிக்கையை அறிக்கையிடுவது தனிப்பட்டதும், குழுமம் சார்ந்ததுமான ஒரு செயல்பாடாகும். திருச்சபைதான் நம்பிக்கையின் முதல் உள்ளீடு (Subject of Faith) அதனிடமிருந்துதான் நம்பிக்கை கொள்பவர்களாகிய நாம் நம்பிக்கையினை பெறுகின்றோம். பெற்ற நம்பிக்கையினை நமது விசுவாசப் பிரமாணமாக அறிக்கை செய்கின்றோம். இந்த நம்பிக்கையின் உள்ளீடு பற்றிய ஒழுங்கமைவான அறிவைப் பெறுவதற்கு கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (Catechism of the Catholic Church) ஓர் அழகிய மற்றும் தவிர்க்க முடியாத உதவியுமாகும் (ந. வா. இல. 10). இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முக்கிய பயன்களுள் ஒன்றுதான் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலாகும். வத்திக்கான் சங்கத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவில் இதனை வெளியீடு செய்தபோது மறைந்த முன்னாள் திருத்தந்தை 2ம் யோவான் பவுல் கூறிய வார்த்தைகள் 'இந்த மறைக்கல்வி திருச்சபையின் முழுவாழ்வையும் புதுப்பிக்கும். நம்பிக்கையை கற்பிப்பதற்கும் இது சரியான அதிகார பூர்வமான கருவியாக இருக்குமென அறிவிக்கின்றேன்' என்பது நினைவு கூரத்தக்கவை.

எனவே எமது நம்பிக்கையின் உள்ளீடுகளை ஒழுங்காகவும், சரியாகவும் நாம் மீண்டும் கண்டுகொள்ளவும், படிக்கவும், புரிந்துகொண்டு செயற்படவும் இந்த நம்பிக்கை ஆண்டு உதவவேண்டுமென திருத்தந்தை அழைக்கின்றார். ஏனெனில் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வியானது 'தனது அமைப்பு முறையில் அன்றாட வாழ்வு நம்பிக்கையின் வளர்ச்சியினை விளக்குகிறது. இதன் ஒவ்வொரு பக்கத்திலும் நாம் வெறும் தத்துவங்களையல்ல மாறாக திருச்சபையில் பிரசன்னமாயிருக்கும் அந்த ஆளை சந்திக்கின்றோம். விசுவாச அறிக்கைக்கு பிறகு அருட்சாதன வாழ்வு பற்றி விளக்கம் காணப்படுகிறது. இந்த அருட்சாதனங்கள் மூலமாக கிறிஸ்து திருச்சபையில் பிரசன்னமாகி செயல்பட்டு அதை வளர்த்தெடுக்கிறார். திருவழிபாடும், அருட்சாதனங்களும் இல்லையெனில் நம்பிக்கை தனது செயல்பாட்டு திறனை இழந்துவிடும். ஏனெனில் கிறிஸ்தவ சாட்சியத்தை தாங்கி நிற்கின்ற அருள் இல்லாமல் போகும். நம்பிக்கை, திருவழிபாடு, செபம் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தி பார்க்கும்போது மறைக்கல்வியின் அறநெறிபற்றிய போதனை அதனை நிறைவு செய்கின்றது (ந. வா. இல. 10). இதனடிப்படையில்தான் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் வெளியீடு செய்யப்பட்டதன் இருபதாவது ஆண்டின் நிறைவில் (11.10.1991) திருத்தந்தையால் நம்பிக்கை ஆண்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### நம்பிக்கை ஆண்டும் இரண்டாம் வத்திக்கான் சங்கமும்

இந்த நம்பிக்கையாண்டில் நாம் கண்டிப்பாக திரும்பிப்பார்க்க வேண்டிய இன்னுமொரு விடயம், இரண்டாம் வத்திக்கான் சங்கமாகும். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஐம்பதாவது ஆண்டின் நிறைவில் (11.10.1962) இந்த நம்பிக்கையாண்டினை முழக்கமிட்ட போது திருத்தந்தையவர்கள் மறைந்த முன்னாள் திருத்தந்தை 2ம் யோவான் பவுலின் வார்த்தைகளை நினைவு கூர்கின்றார். 'திருச்சங்கத்தின் தந்தையர்கள் நம்மிடம் ஓப்படைத்துள்ள ஏடுகள் அவற்றின் மதிப்பையும், பிரகாசத்தையும் இழந்துவிடவில்லை என்பதை மக்கள் புரிந்துகொள்ள ஒரு வாய்ப்பாக அமையும். அவை சரியாக வாசிக்கப்படவேண்டும். பிரபல்யப்படுத்தப்பட வேண்டும். திருச்சபையின் பாரம்பரீயத்தில் இந்த ஏடுகள் முக்கிய மான மற்றும் சட்டப்படியான ஆசிரியமென உள்ளத்தில் ஏற்கப்பட வேண்டும். 'தொடர்ந்து தனது வார்த்தைகளில் திருத்தந்தையவர்கள்' இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை இருபதாம் நூற்றாண்டில் திருச்சபைமீது பொழியப்பட்ட அருளென சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். தொடங்கியிருக்கின்ற புதிய நூற்றாண்டில் நம்மை வழி நடத்துகின்ற பாகை மாணியாக இது செயல்படும்' மேலும் 'வத்திக்கான் சங்க ஏடுகளை நாம் சரியாக விளக்கும் முறையாக நடைமுறைப்படுத்தினால் திருச்சபையைப் புதுப்பிப்பதற்கு சக்தியான கருவியாக இருக்குமென அறுதியிட்டு கூறியதை மீண்டும் சுட்டிக்காட்ட விழைகிறேன் (ந. வா. இல. 05).

### நம்பிக்கை ஆண்டின் அழைப்பு

நம்பிக்கையினை படித்தால் மட்டும் போதாது. அதை நமது வாழ்வாக்க வேண்டும். வாழ்வாக்க வேண்டுமாயின் அதனைத் தகுதியான முறையில் கொண்டாட வேண்டுமென சகோதர ஆயர்களை திருத் தந்தையவர்கள் வாஞ்சையுடன் அழைக்கின்றார். 'நமது பேராலயங்களிலும், உலகெங்குமுள்ள தேவாலயங் களிலும், நமது வீடுகளிலும், இல்லங்களிலும் உயிர்த்த ஆண்டவர்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையை அறிக்கையிட நமக்கு வாய்ப்புக்கள் கிடைக்கும். துறவற இல்லங்களும், பங்குத்தளங்களும் பழைய, புதிய திருச் சபையில் இயங்கி வரும் சபைகளும் இந்த ஆண்டில் பகிரங்கமாக நமது விசுவாசப் பிரமாணத்தை அறிக்கை யிட வழிவகைகளை கண்டறிய வேண்டும்' (ந. வா. இல. 07) என்கிறார்.

மேலும் இந்த ஆண்டில் நம்பிக்கையானது முழுமையாகவும், புதுப்பிக்கப்பட்ட உறுதிப்பாட்டுடனும் அறிக்கையிடப்பட வேண்டும். திருவழிபாட்டிலும், நற் கருணைக் கொண்டாட்டத்திலும் நமது நம்பிக்கையினை கொண்டாட வேண்டும். மேலும் விசுவாசிகளின் சாட்சிய வாழ்வு நம்பிக்கையின் நம்பகத்தன்மையை அதிகரிக்க வேண்டும். இந்த ஆண்டு முழுவதும் அறிக்கையிடப் படுகின்ற, கொண்டாடப்படுகின்ற, வாழப்படுகின்ற மற்றும் செபிக்கப்படுகின்ற நம்பிக்கையின் உள்ளடக்கத்தை ஒவ்வொரு விசுவாசியும் கண்டுகொள்வதுடன், அதன் சிந்தனையை தமதாக்கிக் கொள்ளவும் வேண்டும். ஏனென்றால் நமது நம்பிக்கை உயர்வானது. எனவேதான் தொடக்கத் திருச்சபையில் திருமுழுக்கு பெற்றவர்கள் தங்களது அர்ப்பணத்தை மறந்து விடாமலிருக்க விசுவாசப் பிரமாணத்தை மனனம் செய்து அதை அன்றாட செபத்தில் செபித்தனர். அதனை புனித அகுஸ்தீனார் 'விசுவாசப் பிரமாண வரலாறு' எனும் மறையுரையில் பின்வருமாறு உயர்வாகப் பேசுகின்றார்: 'நீங்கள் அனைவரும் பெற்றுக்கொண்டு, ஒன்றன்பின் ஒன்றாக உரக்கச் சொல்லிய இந்த மறை உண்மைகள் மீதுதான் தாய்த்திருச்சபையின் நம்பிக்கை கட்டப்பட்டுள்ளது. அதன் உறுதியான அடிப்படை நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவே. இதை நீங்கள் பெற்றுக்கொண்டு, உரக்கச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இதை உங்கள் மனதிலும் இதயத்திலும் எப்போதும் இருக்கும்படி பாதுகாக்க வேண்டும். நீங்கள் உறங்கச் செல்லும்போது சொல்லிப்பழக வேண்டும். பொதுவிடங்களில் நினைவுக்கு கொண்டுவர வேண்டும், உண்ணும்போதும் இதை மறக்கக்கூடாது, உங்கள் உடல் உறங்கிக் கொண்டிருந்தாலும் உங்கள் இதயம் இதை பாதுகாக்க வேண்டும்' (ந. வா. இல. 08).

### நம்பிக்கை ஆண்டில் சாட்சியவாழ்வு

எனவே இந்த நம்பிக்கையாண்டு 'அன்புச் செயல்களால் நாம் சாட்சி பகர்வதை தீவிரப்படுத்துவதற்கு ஓர் உன்னத வாய்ப்பாகும். அன்பில்லா நம்பிக்கை எத்தகைய பலனையும் தருவதில்லை அதேபோல நம்பிக்கையில்லா அன்பு எப்போதும் சந்தேகிக்கத்தக்க ஓர் உணர்வாகவே இருக்கும். அன்பைத்தேடி நிற்கின்றவர்களிடம் நாம் நம்பிக்கையின் வழியாக கிறிஸ்துவின் முகத்தை கண்டு கொள்வோமாக. எனவே அன்புச் சாட்சியவாழ்வு நமது நம்பிக்கையை பெருக்கும்.

### நம்பிக்கை ஆண்டும் உறவுத்தேடலும்

இறுதியாக தூய பவுல் சிறுவனாகவிருந்த தீமோத்தேயுவை நோக்கி நம்பிக்கையை நாடித் தேடச் சொல்கிறார் (2 தீமோ. 2:22). எனவே நாமும் நம்பிக்கையில் சோம்பறிகளாக மாறிவிடாமல் முழு உற்சாகத்துடன் தேடுவோம். இந்த நம்பிக்கை ஆண்டு நமதாண்டவர் கிறிஸ்துவோடு உள்ள உறவை அதிகப்படுத்தி உறுதிப்படுத்துவதாக. ஏனெனில் அங்கேதான் எதிர்காலத்தைப் பற்றிய உறுதிப்பாடும், உண்மையான, நிலையான அன்புக்கான உத்தரவாதமும் உள்ளது.

எனவே உயிர்த்த இயேசுவை நம்பிக்கை ஆண்டில் அழமாக அறிவோம். அதை நமது வாழ்வாக்குவோம். வாழ்வாக்கியதை அடுத்தவருக்கு வழங்குவோம்.

அருட்பணி A.A. நவரெட்ணம்
விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், செங்கலடி.

## திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் ஆயர்களின் நம்பிக்கை ஆண்டைப் பற்றிய சுற்றறிக்கை

**அன்பார்ந்த இறைமக்களே !**

### முன்னுரை

பல நூற்றாண்டுகளாக இருண்ட காலத்தை அனுப வித்த திருச்சபையில் ஒளியை ஏற்றிவைத்து, மூடப் பட்டிருந்த திருச்சபையின் கதவுகளைத் திறந்துவிட்டு, புதியதொரு சகாப்தத்துக்குள் திருச்சபையை பயணிக்கச் செய்தது 2ம் வத்திக்கான் சங்கம். திருச் சபையில் எழுச்சியை, மறுமலர்ச்சியை ஏற்படுத்திய 2ம் வத்திக்கான் சங்கம் கூட்டப்பட்டு ஐம்பது ஆண்டு நிறைவு நாளான 2012 அக்டோபர் 11ஆம் நாளிலிருந்து 24.11.2013 வரையுள்ள ஓர் ஆண்டை நம்பிக்கை ஆண்டாக திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அறிவித்து 'நம்பிக்கையின் வாயில்' என்ற திருத்தூதுமடல் ஒன்றை வெளியிட்டுள்ளார். அதே வேளையில் இத்தினம் "கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி" எனும் ஏடு வெளிவந்து இருபதாம் ஆண்டின் நிறைவையும் குறிக்கிறது. அதுதவிர 2012 அக்டோபரில் கூட்டப்பட்ட ஆயர்களின் பெருமன்றத்தின் கருத்தும் 'கிறிஸ்தவ நம்பிக்கையை வழங்குவதற்கான புதிய மறைப்பரப்பு' என்பதாகும். இவை மூன்றையும் பின்னணியாகக் கொண்டுதான் நாம் நம்பிக்கையாண்டின் சிறப்புக்களை திறனாய்ந்து, செயல்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லக் கூடிய வழிவகைகளை ஆய்வு செய்ய முடியும்.

### நம்பிக்கை என்றால் என்ன?

நம்பிக்கை மனிதவாழ்வோடு பின்னிப்பிணைந்தது. நம்பிக்கை சமயவாழ்விற்கு அடிப்படையானது. நம்பிக்கை இல்லையென்றால் வாழ்க்கை அர்த்த மற்றது. நிலையான நிறைவான நம்பிக்கை இறை நம்பிக்கையே.

இயேசுவின் மீதுகொள்ளும் நம்பிக்கை இயேசு கிறிஸ்தவத்தின் சாரமாகவும் உள்ளது. அவரே இறை வனின் நிறைவான வெளிப்பாடு. நமது நம்பிக்கையின் முதல்வரும் முன்னோடியும் அவரே. அவரே இறைமகன் எனநம்பிக்கை அறிக்கை செய்து தான் எவரும் கிறிஸ்தவர் ஆகின்றனர். அவரை அறிந்து, அன்பு செய்து, அறிக்கையிடுவதே நம்பிக்கையின் அடிப்படை யாக அமைகின்றது. அதனை கிறிஸ்தவமைய வாழ்வு அல்லது கிறிஸ்து மயவாழ்வு எனவும் அழைக்கலாம். நம்பிக்கை என்பது வாழ்வு சார்ந்ததாக இருக்க வேண்டும். "உங்களில் கிறிஸ்து இயேசு உருவாக வேண்டும்" (கலா 4:19),"இயேசு கிறிஸ்துவில் இருந்த மனநிலை உங்களில் இருப்பதாக" (பிலி 2:5) எனப் பவுல் இதனை வலியுறுத்துகின்றார்.

2ம் வத்திக்கான் சங்கத்தின் 'இறைவெளிப்பாடு' எனும் கொள்கை திரட்டு நம்பிக்கை பற்றி தெளிவாக விளக்கமளிக்கிறது. கடவுள் நம் வாழ்வாக, மீட்பாக வருகின்றார். கடவுள் நம்மோடு தம்மை இணைத்துக் கொள்ள விரும்புகிறார். கடவுள் மக்களோடு பயணித் தவர் என்பதே விடுதலைப்பயண அனுபவமாகும். நம்பிக்கை என்பது இறை உறவு அனுபவத்தில் எழுவதாகும். தம்மைப் படைத்த கடவுள், பராமரிக்கும் கடவுள், விடுதலை செய்த கடவுள், உறவின் கடவுள், உடன்படிக்கையின் கடவுள், உடனிருக்கும் கடவுள் என்பதே இஸ்ரயேல் மக்களின் நம்பிக்கை அறிக்கை யாக, வெளிப்பாடாக இருந்தது.

### நம்பிக்கை ஆண்டு

தந்தையாகிய இறைவன் புனிதப்படுத்துதலின் ஆவியை திருச்சபை மீதும் உலகின் மீதும் வீசவிரும்புகிறார் என்பதை 50 ஆண்டுகளுக்கு முன்பு உணர்ந்த திருத் தந்தை 23ஆம் அருளப்பர் 2ஆம் வத்திக்கான் சங்கத்தை தொடங்கி வைத்து பேசிய போது திருச்சபையின் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து விடும்படி அனைவருக்கும் அழைப்புவிடுத்தார்.

அவ்விதமே எமது திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் இந்த ஆண்டை நம்பிக்கையின் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி, எமது நம்பிக்கையை முழுமையாகவும், புதுப்பிக்கப் பட்ட உறுதிப்பாட்டுடனும், தன்னம்பிக்கையுடனும், எதிர் நோக்குடனும் அறிக் கையிட எமது இதயங்களின் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்துவிடும்படி அழைப்பு விடுத்துள்ளார் (ந.வா 8).

தொடர்ச்சி 6ம் பக்கம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பக் குவலயம்



## குடும்பம் என்பது இறைவனின் உன்னத இணைப்பு, விலைமதிப்பற்ற உன்னத படைப்பு, நிறை சொத்து.

எமது தொடக்க நூல் இவ்வாறு கூறுகிறது ………

மனிதனைத் தம் சாயலிலும் உருவிலும் உண்டாக்குவோம்'' என்று மொழிந்ததற்கிணங்க ஆணும் பெண்ணுமாகவே அவர்களைப் படைத்தார் (தொ.நூ. 1:26-27) என்று மறை நூலில் காணுகின்றோம். ஆணும் பெண்ணுமாகப் படைத்ததின் மூலம் இறைவன் **"குடும்பம்"** என்ற மூல அமைப்பிற்கு தொடக்கத்திலேயே வழி அமைத்தார் என்பதை உணர்வோம். ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஒரு குடும்பமாய் இணைந்து வாழ்ந்து ஒருவர் ஒருவரை அன்பு செய்து பராமரித்து அதன் விளைவாக மழலைச் செல்வங்களைப் பெற்றெடுத்து வளர்த்து வாழ்வதே இறைவனின் சித்தமாகும்.

இன்று நம் உலகில் கோடிக்கணக்கான குடும்பங்களைக் காணுகின்றோம். இவற்றில் பல நூறு குடும்பங்கள் முன் மாதிரியானவைகளாகக் காணப்படுகின்றன. ஆயினும் இவற்றிற்கெல்லாம் மேலான குடும்பமாக எடுத்துக்காட்டக்கூடிய குடும்பமாக உள்ளது திருக்குடும்பமே! அது யோசப், மரியாள், இயேசு என்பவர்கள் வாழ்ந்த புனித குடும்பம் ஆகும். இதன் வழியாக அவர்களிடையே இறை நம்பிக்கை மிளிர்ந்து ஜெபம் ஜெயமாக இருந்தது. இதன் வழியாக அவர்களிடையே இறையனுபவம் நீடித்து இருந்தது, அன்புறவு வளர்ந்து மலர்ந்தது, தியாகம் நீடித்தது, அமைதி நிலவியது, மன்னிப்புக்கு வழி வகுத்தது. அயலவர் மேல் அக்கறை கொண்டிருந்தார்கள். இக் குடும்பச் செயற்பாட்டினையே கட்டுக் கோப்பையே முன் மாதிரிகை எனக் கடைப்பிடித்து வாழவேண்டியது ஒவ்வொரு கத்தோலிக்க குடும்பங்களின் தலையாய கடமையாகும்.

நாம் இன்று விஞ்ஞான வளர்ச்சியின் உச்சக் கட்டத்தில் வாழ்கின்றோம். அன்று வாழ்ந்த எம் மூதாதையரின் வாழ்வு முறையின் ஒவ்வொரு அம்சத்திலும் மாறுபட்டு உயர்ந்து நிற்கிறோம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இவ்வாறான மாறுபாடுகளினால் நம் குடும்பங்களில் அன்று நிலவிய அமைதி குலைந்து, இன்று விரிசல்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. விரிசல்கள் குடும்பத்தில் ஏற்பட பல காரணங்கள் உள்ளன. அவை எல்லாவற்றிற்கும் மேலான முக்கியமான காரணமாக நாம் முன் வைக்க நினைப்பது **"சந்தேகம்"** என்ற கொடிய சாத்தனையே.

கணவன் மனைவி என்பவருக்கிடையில் **"சந்தேகம்"** என்ற நிலை ஏற்படுவது இன்றைய நாகரீக வாழ்க்கையில் தவிர்க்க முடியாது தான் ஆனாலும், அதற்கு நாம் முன்னுரிமை கொடுக்கும் போது தான் பிரச்சனையே துளிர் விடுகிறது. இன்று ஆண், பெண் சகலருமே வருவாய் தேடி பல அலுவலகங்களில் கடமை புரிவது தெரிந்ததே. தனது கணவன் அலுவலகத்தில் பல பெண் ஊழியர்களோடு சேவை செய்ய பழக வேண்டியுள்ளது. அதே போல் வேலைக்குச் செல்லும் பெண் ஊழியர் அங்கே பல ஆண்களோடு தொழில் புரிய வேண்டியுள்ளது. இது தம்பதியருக்கு நன்கு தெரிந்த விடயம் என்பதோடு தவிர்க்க முடியாத ஒன்று என்றும் இருவருக்கும் தெரியும், புரியும் ஆயினும் நடைபெறுவது என்ன?

தன் கணவன் வேலை பார்க்கும் அலுவலக கிளார்க் பெண்ணோடு மிக நீண்ட நேரம் உரையாடுகிறார். என்ன காரணம் என அதை அறிய முற்படாமல், அவள் தன்னை விட அழகாக இருப்பது தான் காரணம் என்று மனைவி தாமாகவே முடிவெடுக்கிறாள்.தன் மனைவி வேலை பார்க்கும் அலுவலக கிளார்க் இளைஞனோடு அடிக்கடி தொடர்பு கொள்கிறாள், கதைக்கிறாள் இப்படி ஒரு சிந்தனை கணவருக்கு. இதன் பின் விளைவு என்ன? இன்றைய கால கட்டத்தில் இருவரும் வேலைக்காக வெளியே செல்லும் குடும்பங்களில் மலிந்து காணப்படும் நிலை இதுவே ! இதற்கு முக்கிய காரணம் இருவருக்கமிடையே குறைவடைந்துள்ள உறவாடல் தன்மையே மனம் விட்டுப்பேசச் சந்தர்ப்பம் கிடைக்காமையே முக்கிய காரணம் ஒரே பரபரப்பு!

காலை அவசர அவசரமாக இருவரும் புறப்படுவது அதே போல் களைத்த நிலையில் மாலை வீடு வந்து சேர்வது இன்னுமொரு காரணம். சரி வீட்டுக்கு வந்த பிறகாவது உரையாடுகிறார்களா என்று கேட்டால் பெரும்பாலும் **"இல்லை"** என்றே சொல்ல வேண்டும். அலுவலகத்தில் செய்து முடிக்காத **"பைல்"**களோடு மாரடிக்கும் கணவன் ஒரு பக்கம், இர்வுக்கான உணவைத் தயாரிப்பதில் சமையலில் போராடும் மனைவி மறுபக்கம். உழைத்து களைத்து சோர்வடைந்த நிலையில் அன்றைய நாள் பொழுது முடிந்து விடும் மறு நாள் மீண்டும் அதே பல்லவி ……… தொடரும்

இத்தனை சிக்கலுக்கு மத்தியிலும் சிக்கனமாக நேரத்தை ஒதுக்கி தம்பதியருக்கிடையே உரையாடல் எங்கு நிகழுமோ அங்கு நிம்மதி பெரு மூச்சோடு ஆனந்த பரிமாற்றமும் நிகழும் நிகழ ஆரம்பிக்கும் என்பதில் எந்த வித சந்தேகமுமில்லை

**கலாபூஷணம் :. தாபி சுப்பிரமணியம்**
**(பேராலயப்பங்கு)**

### ஜோக்ஸ்

**சோமு :- கடவுளே எனக்கு ஒரு ரூம் நிறைய தங்கம் கொடு.**

**ராமு :- எனக்க ஒரு ரூம் நிறைய வைரம் கொடு .**

**கோமு :- எனக்கு அந்த ரெண்டு ரூம்களோட சாவியைக் கொடு.**

**சோமு, ராமு :- ? ? ? ? ?? ?**




**பையன் : அப்பா சுரேஸ் என்ன அடிச்சுட்டான்பா.**

**அப்பா : வாத்தியார் கிட்ட புகார் கொடுக்க வேண்டியது தானே**

**பையன் : வாத்தியார் பெயர் தான் சுரேஸ்.**

## திருகோணமலை மறைமாவட்டத்தின் மேய்ப்புப் பணிச்சபையின் 2013 ஆண்டுக்கான மகாநாடும் பொதுக்கூட்டமும்





திருகோணமலை மறை மாவட்ட மேய்ப்புப் பணிச் சபையின் 2013ம் ஆண்டுக்கான அமர்வானது 14ம் திகதி அன்று காலை 8.00 மணியளவில் உப்புவெளி மேய்ப்புப் பணி நிலையத்தில் நடைபெற்றது சபையின் தலைவரான மறைமாவட்ட ஆயர் அதி.வந்.கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மங்கள விளக்கை ஏற்றி வைத்து நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். அதனைத்தொடர்ந்து செபவழிபாடு இடம் பெற்றது. அதன் பின் நம்பிக்கை ஆண்டுக்கான விளம்பரச்சின்னம் (**Banner**) ஆயரினாலும் குருமுதல்வரினாலும் திரைநீக்கம் செய்யப் பட்டு நம்பிக்கை ஆண்டுக்கான மன்றாட்டும் அவ் வேளையில் சொல்லப்பட்டுது.

அதன்பின் சிறப்புரை வழங்க வந்த அருட்பணி ஸ்டனி அன்டனி(அ.ம.தி) வவுனியா அவர்களை ஆயரின் பிரதிநிதி அருட்பணி நோயல் இம்மானுவேல் அவர்கள் அறிமுகப்படுத்தினார். அவர் தொடர்ந்து கூறும்போது இவர் முன்னால் யாழ். சவேரியார் குருத்துவக்கல்லூாயில் விசுவாச சத்தியத்தைப் பற்றி விரிவுரையாளராக கடமையாற்று கின்றார். என்றும் முன்னால் மன்னார் மறைமாவட்டத்தின் பொது நிலையினர் ஆணைக்குழுவின் பொறுப்பாளராக கடமையாற்றியவர். இன்றும் வவுனியாவில் அமலமரித் தியாகிகளின் பிரசங்கியாளர் அமைப்பின் பொறுப்பாளர் என்றும் உரோமையில் விசுவாச சத்திய கோட்பாடு பற்றி கலாநிதிப்பட்டம் பெற்றவர் என்றும் கூறினார். தொடர்ந்து அருட்பணி ஸ்டனி அன்டனி (அ.ம.தி)வவுனியா அவர்கள் உரையாற்றுகையில் நம்பிக்கையை வாழ்வாக்குவோம். என்ற தொனிப் பொருளில் நம்பிக்கையின் ஆண்டைப்பற்றி விரிவாக விளக்கம் கொடுத்தார்.

நம்பிக்கை ஆண்டில் இன்றைய எமது நிலைமைகள் நம்பிக்கை என்பது என்ன? புதிய எற்பாட்டில் கிறிஸ்துவே நம்பிக்கையின் மையம், தூய பவுல் அடிகளாரின் பார்வையில் நம்பிக்கை, திருத்தந்தையின் சுற்றுமடல் நம்பிக்கையின் வாசல், நம்பிக்கை வாழ்விற்கு எதிரான இன்றைய சவால்கள்? என்ற தலைப்புகளில் உரையாற்றியதுடன் திரைப்படம் காட்டும் கருவியின் மூலம் (Projetor) உதாரணங்கள் தந்து விரிவுரையாற றினார்.

அதனை தொடர்ந்து குழுக்களாக பிரிக்கப்பட்டு வினாக்கள் கொடுக்கப்பட்டு கலந்தாலோசிக்கப் பட்டது. பின்பு திருகோணமலை மறை மாவட்டத்திற்கு உட்பட்ட பங்குச்சபை களிலும் மறை மாவட்ட மேய்ப் புப்பணிச்சபையின் அமைப்பு விதிகள் வாசிக்கப்பட்டு திருத்தம் செய்யப் பட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதை அடுத்து திருகோணமலை மேய்ப்புப்பணிச்சபையின் உத்தியோகத்தர் தெரிவுகள் இடம் பெற்றன.

தலைவர் :- ஆயர் அதி.வண.கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை
உபதலைவர்:-பொதுநிலையினர்ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி S.S.ஜோன்பிள்ளை
செயலாளர் :- திரு.ப.போல்பிரகாஷ் (உவர்மலைப்பங்கு)
உபசெயலாளர்:-திருமதி.ம.சுரேந்தினி (பாலையூற்றுப் பங்கு)
பொருளாளர் :- திரு. அன்டனிதாஸ் (குவாடலூப்பே பங்கு)
எண்பார்வையாளர்கள்:-
திரு.K.S.கொலின் (பேராலயப் பங்கு)
திரு A.மன்மதன் (பாலையூற்றுப் பங்கு)

அதை அடுத்து நிர்வாக சபை உறுப்பினருக்கான தேர்வும் இடம் பெற்றது. அதில் மூதூர், சீனன்குடா, சாம்பல்தீவு, இறை இரக்கப் பங்குகளில் ஒருவர் அடிப் படையிலும் துறவறசபைகள் சார்பில் அருட்சகோதரி அருள்மேரி (அ.க.ச) ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டனர்.

அதன் பின்பு கலந்துரையாடலின் தொகுப்பு ஆயரின் பிரதிநிதி அருட்பணி நோயல் இம்மானுவேல் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது. இதை அடுத்து செயலாளரினால் நன்றி உரை கூறப்பட்டது. சிறு செபத்துடனும் ஆயரின் ஆசியுடனும் இனிதே நிறைவு பெற்றது. முடிவில் ஆயரினால் நம்பிக்கை ஆண்டுக்கான நினைவு சின்னம் எல்லோருக்கும் வழங்கப்பட்டது. அத்துடன் திருத்தந்தையின் சுற்றுமடல் நம்பிக்கையின் வாயில் என்ற புத்தகமும் கத்தோலிக்க திருச்சபையின் மறைக் கல்வியின் சுருக்கம் (C.C.C) என்று ஏடும் விநியோகிக்கப்பட்டது.

இவையாவும் திருகோணமலை மறை மாவட்ட பொதுநிலையினர் ஆணைக் குழுவின் இயக்குனர் அருட்பணி S.S. ஜோண்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தகவல் :- கோ.மனோகரதாஸ் (குவாடலூப்பே பங்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2013ல் இளைஞர்களே

## Hai friends

இளையோரே இளமைப்பரும் மகிழ்ச்சியோடிருப்ப தற்கே இளமையின் நாள்களில் உள்ளக் களிப்புடன் இருங்கள், மனம் விரும்புவதைச் செய்யுங்கள். கண்களின் நாட்டத்தை நிறைவேற்றுங்கள். ஆனால் நீங்கள் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும் உரிய தீர்ப்பை கடவுள் வழங்குவார் என்பதை மறவாதீர்கள் என்று சபையுரையாளர் தருகின்ற ஆழ்ந்த கருத்தை தெரிவித்து மலர்ந்துள்ள ஆண்டின் நல்வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றேன்.

**Øதிருச்சபைதரும் நம்பிக்கையாண்டு**

ஒவ்வொரு வருடத்திலும் தாயாம் திருச்சபை நமக்கென பலவேறு விதமான சிந்தனைகளைத் தருவதுடன், நம்மைத் தியானிப்பதற்கும் அழைப்பு விடுக்கின்றது. அந்த வகையில் இவ்வருடத்தை நம்பிக்கையின் ஆண்டாக தந்துள்ள திருச்சபையானது இளைஞர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றது காரணம் இன்றைய இளைஞர்கள் தான் திருச்சபையின் சிறந்த தூண்கள்

**Øஉங்களை குறைந்து மதிப்பிட வேண்டாம்**

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் இவ்வுலகில் வாழ்ந்த இறைமகனாம் இயேசுவின் இளமைப்பருவம் இன்றைய இளைஞர்கள் ஒவ்வொருவருக்கும் சிறந்த எடுத்துக்காட்டு மட்டுமல்ல மனதளவில் சோர்ந்து உடலில் இனிபலமில்லையே, வேலையில்லையே வீட்டினருக்கு பாரமோ என்ற தவறான எண்ணம், கவர்ச்சியான உடலமைப்பு இல்லையே என்ற தவறான கருத்து இவை போதாதென்று அழகில்லையே என்ற ஆதங்கம். இவ்விதமான எண்ணங்களுடன்வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒவ்வொருவருக்கும் இயேசுவைவிட சிறந்த உதாரணம் வேறு எதுவாக இருக்க முடியும். ஆனால் நாங்கள் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும் வார்த்தையான கடவுள் நாம் எவ்விதமான தோற்றத்துடன் இருக்க வேண்டும் என்று திட்டமிட்டே படைத்துள்ளார். அவ்விதமாகவே தாயின் கருவில் நம்மை உருவாக்கியுமுள்ளார். நிரந்தரமானதும் நிம்மதிதரக்கூடியதுமென்றால் அது இறைவனோடு நாம் சேர்ந்து நடக்க வேண்டிய காலடித்தடங்களே

**Øஉங்களை குறித்து ஆண்டவர் திட்டம் வைத்துள்ளார்**

எனதன்பு இளைஞர்களே, உங்களிடம் ஒன்று கேட்கின்றேன் தித்திக்கும் இனிப்பைத் தருகின்ற வேப்பம் பூ கசப்பு நிறைந்ததுதான் அந்த கசப்புச்சுவை நிறைந்த வேப்பம் பூவிற்குள் மறைந்துள்ள இனிமையின் சுவையினை கூற வார்த்தைகளே இல்லை எனலாம். அப்படியானால் இறைசாயலாகப் படைக்கப்பட்ட இறைவனின் பிள்ளைகள் எம்மிடம் எவ்வளவு இனிமை நிறைந்திருக்கும். வேம்பின் தன்மை அதுவாக இருக்கின்ற போது இது பற்றி நாம் ஒருபோதும் யோசித்ததில்லையே. ஏதோ வாழவேண்டும் என்று வாழ்கின்ற இளைஞர்கள் நம்மத்தியில் இல்லாமல் இல்லை. இப்படியானதொரு வாழ்க்கைக்குத்தானா இறைவன் உங்களைப் படைத்துள்ளார்? உங்கள் மட்டில் இறைவன் மாபெரும் திட்டம் வைத்துள்ளார் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள மறுக்கின்றீர்கள்.

**Øஉங்களாலும் முடியும்**

இளைஞர்களே சற்று யோசித்துப் பாருங்கள். வானத்துப்பறவைகளுக்கு உணவை வழங்குகின்ற கடவுளின் வியப்புமிக்க செயல் உங்களைச்சிந்திக்க தூண்டவில்லையா? கற்பாறைக்குள் இருக்கும் தேரைக்கு கடவுள் கருணை காட்டவில்லையா? காட்டு அத்திமரத்தை இறைவன் செழிக்க வைக்கவில்லையா? இவற்றையெல்லாம் செய்கின்ற இறைவன் உங்களை எவ்விதமாக கண்ணோக்குவார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். இவையெல்லாவற்றையும் விட இறை மகனின் பாடுகளை சற்று உற்றுநோக்கிப் பாருங்கள் உங்கள் துன்பங்கள் துயரங்கள் ஓடிவிடும். மலர்ந்துள்ள இந்த ஆண்டு மட்டுமல்ல, நீங்கள் கடக்க இருக்கின்ற ஒவ்வொரு ஆண்டும். உங்கள் வாழ்வை வளமுள்ள தாக்கும் வாழ்துக்கள். தொடர்ந்து வருகின்ற காலங்க ளில் அனுபவப்பகிர்வுகளோடு உங்களைச் சந்திக்கின் றேன்.

அதுவரை.......

**தன்னால் முடியும் என்பது தன்னம்பிக்கை**
**தன்னால் மட்டும் முடியும் என்பது தலைக்கணம்**
**தன்னம்பிக்கையோடு போராடுங்கள்**

**ஆக்கம் :- க.கியூரி – உவர்மலை**

# திருமலை தீபமே உன்னை வாழ்த்துகின்றேன்

திருமலை தீபமே உன்னை
குழந்தையாய் கன்னியாய் புதுப் பெண்ணாய்
வாழ்த்தி வரவேற்கும் நன்நாளின்றே
இன்று திருமலை ஈன்றெடுத்த
முதல் முத்தும் நீயன்றோ
உன்னை வாழ்த்தி வரவேற்க
உறவுகள் பல தாகத்தோடு காத்திருக்கிறார்கள்
உன் இனிய வரவினால்
எழுத்தாளர்கள் இன்னும் சிலர் காத்திருக்கிறார்கள்
பிறப்பதற்கும் காத்திருக்கிறார்கள்
திருமலை தீபமே உன்னை சுவைப்பவர்
சிறுவர் தொடங்கி முதியோர்வரை உன் மேல் ஆவல்
கொள்ளவேண்டும்
நீ சுமந்து வரும் ஒவ்வொன்றும்
தெளிவானதும் தேனானதுமாக தித்திடவும்
உன் வரவு மலர்ந்திடவும்
இன்று உன்னை வாழ்த்தி வரவேற்கிறேன்....
நன்றி

**ஆக்கம் கு.சுபாஷினி**

**மறைக்கல்வி நடுநிலையம்**

**திருமறைக்கல்வி நடுநிலையத்தின் மாதாந்த செயல் திட்டம் - 2013**

தை (ஜனவரி)

11-13.01.2013 - மறையாசிரியர் வினத்தாள் மதிப்பீடு செய்தல் குருநாகல்
19.01.2013 - மறையாசிரியர் கருத்தரங்கு
26.01.2013 - ஏ/எல் கருத்தரங்கு
27.01.2013 - பங்குதரிசிப்பு

மாசி (பெப்ரவரி)

09.02.2013 - பயிலுனர் ஆசிரியர், தேர்வு 2,3க்கான கருத்தரங்கு
16.02.2013 - மறையாசிரியர் கருத்தரங்கு
21.02.2013 - தேசிய மறைக்கல்வி ஆணைக்குழு கூட்டம்
23.02.2013 - ஏ/எல் கருத்தரங்கு
24.02.2013 - பங்குதரிசிப்பு

**தகவல் :. திருமறைக்கல்வி நிலையம்.**
**திருகோணமலை மறைமாவட்டம்.**

1ம் பக்க தொடர்ச்சி .....

**ஆயரின் பிரதிநிதி ஆசிச்செய்தி**

இந்த நம்பிக்கையின் ஆண்டில் எமது மறைமாவட்டப் பத்திரிகை வெளிவருவ்து மகிழ்ச்சியை அளிக்கின்றது. விசுவாசிகள் உள்ளங்களில் நம்பிக்கை வளர, நிலைத்திருக்க, மணம்பரப்ப திருமலைத் தீபம் உதவவேண்டும் என ஆசிக்கிறேன். பலரது ஆலோசனைகள், ஆக்கங்கள், பங்களிப்புக்களை உள்வாங்கி இந்தப் பத்திரிகை வெளிவருகின்றது. இதன் முதல் ஆசிரியராக ஆர்வமுள்ள அருட்பணியாளர் மதுராங்கன்குருஸ் அடிகளை நான் பாராட்டுகிறேன். இவரது முயற்சிகள் அனைத்தும் வெற்றியளிக்க வேண்டும், அனைவருக்கும் பயனுள்ளதாக அமைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இந்த கன்னி முயற்சியில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்பது எனது விருப்பம். மறை மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் இந்த பத்திரிகை சென்றடைய வேண்டும் என்பதில் முனைப்பாக இருந்து பங்குத்தந்தையர், துறவறத்தவர், மறையாசிரியர்கள், பக்திச்சபை அங்கத்தவர்கள், மாணவர்கள் அனைவரும் ஒத்துழைத்தால் மறைமாவட்டம் ஆன்மீகத்தில் உறுதிபெறும் என்பது எனது அசையாத நம்பிக்கை.

திருமலைத்தீபம் வெளிவருவதில் பங்களிப்பு செய்யும் அனை வருக்கும், பணிகளைத் தலைமை தாங்கும் பத்திரிகையின் ஆசிரியர் அருட்பணி மதுராங்கன்குருஸ் அடிகளுக்கும் எனது பாராட்டுதல் களையும் வாழ்த்துக்களையும் கூறிமுடிக்கிறேன்.

**அருட்பணி நோயல் இம்மானுவேல், ஆயரின் பிரதிநிதி.**

1ம் பக்கத் தொடர்ச்சி.....

**குரு முதல்வரின் ஆசிச்செய்தி**


அந்தவகையில் மறைமாவட்டச் செய்திகளை இலகுவில் அறியக்கூடிய பங்குத் தளங்களில் இடம் பெறும் நிகழ்வுகளையும் செயற்பாடுகளையும் பார்க்க கூடிய மற்றவர்களுக்கு அறிவிக்கக்கூடிய அரிய வாய்ப்பு திருமலைத்தீபம் என்கின்ற ஒரு சக்தியாக எமது கரங்களிலே தவழ்கின்றது.

நம்பிக்கை ஆண்டை சிறப்பிக்கும் வண்ணம் பல்வேறு செயல் திட்டங்களை முன்னெடுக்க முனைந்து நிற்கும் திருமலைத்தீபம் அரியதொரு ஊடகமாக திகழுமென்பதில் ஐயமில்லை.

இத்தருணத்தில் திருமலைத்தீபம் முதல் ஆசிரியர் அருட்தந்தை மதுராங்கன் குருஸ் அவர்களையும்,அதனை வெளியிட அவர் தாண்டி வந்துள்ள பல சிரமங்களையும் நாம் பாராட்டுகின்றோம். பல்வேறு தரப்பட்டவர்களுடைய நல்லாக்கங்கள் இப் பத்திரிகையை மென்மேலும் அலங்கரிக்க வேண்டும் என்ற பணிவான வேண்டுகோளோடு மனம் நிறைந்த ஆசிகளைக் கூறி திருமலைத்தீபத்தை வரவேற்கின்றேன்.

**குருமுதல்வர்:- அருட்பணி T. கிங்ஸ்லி றொபட்**

## நம்பினால் நம்புங்கள்




இயேசு அவரிடம் நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய் என நான் உன்னிடம் கூறவில்லையா என்று கேட்டார்..(யோவா 11:40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முத்திபேறு பெற்ற மறைசாட்சி
# தேவசகாயம்பிள்ளை [1712-1752]

என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில், தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவார். என் பொருட்டுத் தம் உயிரை இழக்கும் எவரும்அதைக் காத்துக் கொள்வார் (லூக்கா 9:23-24)

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கொடுத்த இந்த போதனையை உள்ளத்தில் தாங்கி, இரத்தம் சிந்திய ஒரு மிகப்பெரிய மறைசாட்சி முத்திபேறு பெற்ற தேவசகாயம்பிள்ளை. தமிழக திருச்சபைக்கும், குமரி முதல் இமயம் வரை இந்திய நாட்டிற்கும் கடவுளின் கண் பார்வையில் அருள் கிடைத்துள்ளது என்பதற்கு இவர் ஒரு இரத்த சாட்சியாவார். இந்திய பூமியில் வாழும் அனைவரும் இதை நினைத்து மகிழ்ச்சி அடைவோம்.

இந்த 2012ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ம் திகதி முத்திபேறு பெற்ற மறைசாட்சி என்று கத்தோலிக்க திருச்சபை தேவசகாயம் பிள்ளையை புனிதர்களின் திருக்கூட்டத்தில் ஒருவராக அறிவித்து கொண்டாடி மகிழ்கிறது.

தேவசாயம்பிள்ளை என்ற வரலாறு புத்தகத்தை எழுதிய திரு.A. மாதவடியான் கூறுவது தேவசகாயம் பிள்ளை திருமுழுக்குப் பெற்று 7 ஆண்டுகளும், கத்தோலிக்க மத விசுவாசத்தின் பொருட்டு சிறைவாழ்வு தொடங்கி, 40 நாள் குறைவாக 3 ஆண்டுகளும், அவர் பிறந்த 40 ஆண்டுகள் நிறைவடைகின்ற 1752ம் ஆண்டு மகர மாதம் 14ம் நாள் வெள்ளிக்கிழமை அவரது உலக பந்தங்களை எல்லாம் தீர்த்து அவருக்கு விண்ணகம் அளிக்க ஆண்டவர் விரும்பினார்.

### பிறப்பு

முத்திபேறு பெற்ற தேவசகாயம் பிள்ளை 1712ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23ம் திகதி, குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ள நட்டாலம் என்ற கிராமத்தில் பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் தந்தை வாசுதேவன் நம்பூதிரி, தாய் தேவகிஅம்மா. தேவசகாயம்பிள்ளையுடைய இயற் பெயர் நீலகண்டபிள்ளை காலத்துக்கு ஏற்பவும் செல்வாக்கிற்கு ஏற்பவும் கல்வி கற்றார். வடமொழி, மலையாளம், தமிழ் மொழிகளில் புலமை பெற்றிருந்தார். மட்டுமின்றி தத்துவம், இறையியல், இலக்கணம் முதலியவற்றிலும் புராணம் படித்து மனப்பாடமாய் ஒப்புவிப்பதிலும் சண்டை பயிற்சியிலும் தன் திறமையை வெளிப்படுத்தினார். உரிய வயதில் நீலகண்டன் தன் இனத்தில் திருமணம் செய்து கொண்டார். சாதி மத சடங்குகளை அனுசரித்தார். தனது 21வது வயதில் மன்னர் மார்த்தாண்டவர்மாவால் பத்மனாபபுரம் நீலகண்ட சுவாமி கோவிலில் இவர் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். நீலகண்டன் கோவில் காரியங்களை கவனிப்பதோடு மட்டுமல்லாமல் படைப் பிரிவு அதிகாரிகளுக்கும் சம்பளம் வழங்குதல், பத்மனாபபுரம் கோட்டை கட்டும் பணிக்கு பொருட்கள் சேர்த்தல், வேலைக் காரர்களுக்கு கூலி கொடுத்தல், அரண்மனை சம்பந்தப்பட்ட வைகளை மேற்பார்வை செய்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டிருந்தார்.

### நீலகண்டரின் மனமாற்றம்

இப்பேர்ப்பட்ட முக்கிய பணிகள் ஆற்றிக் கொண்டிருக்கும் பொழுது 1741ம் ஆண்டு டச்சுக்காரர்கள் தென் திருவிதாங்கூர் குளச்சல் துறைமுகத்தைக் கைப்பற்ற படையெடுத்தனர். மன்னர் மார்த்தாண்டவர்மா தன்னுடைய திறமையை காட்டி டச்சுப் படையைத் தோற்கடித்தார். அப்போது டச்சு படைத்தளபதியாய் இருந்த உஸ்தாக்கியூஸ் பெனடிக்ட் தேலனோய் (Eustachius Bendedictus De Lannoy) என்பவரை சிறைபிடித்தார். தேலனோய் என்பவர் டச்சு படையை சேர்ந்தவராய் இருந்தும், பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்கர் ஆவார், தெய்வபக்தி நிறைந்தவர்.

மன்னர் மார்த்தாண்டவர்மாவுக்கு நம்பிக்கையுடன் நடந்து கொண்டார். எனவே மன்னர் அவரை நம்பிக்கைக்குரிய நண்பராகவும், படைத்தளபதியாகவும் ஆக்கிக் கொண்டார். தேலனோயுடைய நட்பு மன்னருக்கு மிகவும் சாதகமாக அமைந்தது. ஏனெனில் புதிய ஆயுதங்கள் செய்ய மேலைநாட்டு தொழில்நுட்பம் கிடைத்தது. இந்த தருணத்தில்தான் அதிகாரிகளுக்கு சம்பளம் வழங்கிய நீலகண்டபிள்ளையும் தளபதி தேலனோய் என்பவரும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இவர்களின் சந்திப்பு பெரும் நட்புறவாக வளர்ந்தது.

நீலகண்டபிள்ளை ஒரு நாள் களைப்புற்று முகம் வாடிய நிலையில் இருந்த பொழுது தேலனோய் அவரது முகவாட்டத்தைக் கண்டு கரிசனையோடு விசாரிக்க நேர்ந்தது. நீலகண்ட பிள்ளை தம்முடைய குடும்ப துயரங்களைப் பற்றி வருத்தத்துடன் தெரிவிக்கவும் தேலனோய் தன்னுடைய ஆறுதல் வார்த்தைகளை பேச ஆரம்பித்தார். தமது உள்ளத்தில் கிடந்த கிறிஸ்துவ விசுவாச உண்மைகள் அவரது ஆறுதல் தரும் வார்த்தைகளில் பிரகாசித்தன. மனிதனுடைய உண்மையான இன்பம் இவ்வுலகில் அல்ல மறு உலகில்தான். உண்மையான இன்பத்தை மனித ஆன்மா மறு உலகில் காணும். இதற்கு கடவுளுடைய அருள் அவசியம் என்றார். பழைய ஏற்பாட்டில் யோபுவின் வாழ்க்கை வரலாற்றை நீலகண்டபிள்ளைக்கு சொல்லிக்கொடுத்தார்.

துன்பத்திலும் கடவுள் மேல் பிரமாணிக்காமான விசுவாசியாய் இருந்தார் யோபு. யோபுவின் வரலாறு நீலகண்டபிள்ளையின் இதயத்தைத் தொட்டது. போகப்போக நீலகண்டபிள்ளையும், தேலனோய் அவர்களும் ஆத்மீக தோழர்கள் ஆனார்கள். நீலகண்ட பிள்ளை நாளுக்கு நாள் இயேசுவை பற்றிய விசுவாசத்தில் வளர்ந்தார். எனவே திருமுழுக்கு பெற ஆசைப்பட்டார்.

அரச மாளிகையில் பணிபுரியும் அதிகாரி ஒருவர் திருமுழுக்கு பெறுவது என்றால் அவ்வளவு எளிதல்ல. மன்னர் மார்த்தாண்டவர்மா ஒரு பெருமாள் பக்தர் மாத்திரமல்ல ஒரு பிராமணர் பக்தரும் கூட. கிறிஸ்தவம் தழுவுகின்றவர் சண்டாளர் என்றும், தாழ்ந்த குலத்தவர் என்றும் எண்ணிய சத்திரியர்களும் பிராமணர்களும் அரசரின் அரண்மனையை வலம் வந்த நேரம். நீலகண்டபிள்ளை கிறிஸ்துவைத் தழுவி அந்த அரண்மனைக்குள் நுழைவது எப்படி?

தேலனோய் நல்லதொரு ஆலோசனை கொடுத்தார். தென் திருவிதாங்கூர் எல்லையைத் தாண்டி பாண்டிய நாட்டு எல்லைப் பகுதியில் அமைந்த வடக்கன்குளம் பகுதியில் பணியாற்றிய பரஞ்ஜோதி நாதர் என்ற இயேசு சபையைச் சார்ந்த அருள்தந்தை புத்தாரி அவர்களிடம் சென்று திருமுழுக்கு பெற எற்பாடு செய்தார். நண்பரின் ஆலோசனைப்படியே 1745ம் ஆண்டு நீலகண்டபிள்ளை அருள் தந்தை பரஞ்ஜோதி நாதர் கரங்களால் திருமுழுக்கு பெற்றார். நீலகண்ட பிள்ளை தேவசகாயம்பிள்ளை (Lazar) ஆனார்.

சில நாட்கள் வடக்கன் குளத்தில் தங்கி இருந்த பின்பு தேவசகாயம்பிள்ளை பத்மனாபபுரம் அரண்மனையில் மீண்டும் பணியைத் தொடர்ந்தார்.

நீலகண்டன் தேவசகாயம் ஆகிவிட்டதை மூடி மறைக்க முடியவில்லை. செய்தி காட்டுத் தீ போல் பரவியது. அரண் மனையிலும் இல்லத்திலும் தேவசகாயத்திற்கு நெருக் கடிகள் ஏற்பட்டன என்று சொல்ல அவசியமில்லை.

### மனைவி மனம் திரும்புதல்

அவரது மனைவி பெயர் திருமதி பார்கவி அம்மா. மூதாதையர் வணங்கிய தேவர்களை விட்டுவிட்டு சண்டாளர்களும் அடிமைகளும் பின்பற்றும் நீசமான புதுமதத்தை தன் கணவர் தழுவியதை அவரால் சிறிதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் தேவசகாயம்பிள்ளை தன் அன்பு மனைவிக்கு உறுதியுடனும், பாசத்துடனும் இயேசுவே நமது மீட்பர் என்ற சத்தியத்தை விளக்கி ஆண்டவர் பக்கம் அவரை மனந்திருப்பினார். கணவரின் வழியில் ஆண்டவர் இயேசுவின் மீதும் தாய் மரியாள் மீதும் அவருக்கு பக்தி மேலிட தமது கணவரைப் போலவே அவரும் வடக்கன் குளம் சென்று அருள்தந்தை பரஞ்ஜோதி நாதர் சே.ச. அவர்களிடம் திருமுழுக்கு பெற்று திருமதி. ஞானப்பூ (திரேசா) என்ற பெயர் பெற்றார்.

அரண்மனையிலும், சமூகத்திலும் பிராமணர்களின் நெருக்கடியும், பழிச்சொல்லும் அதிகமாகவே இருந்தது. சே.ரோ. நற்சீசன் என்ற ஆசிரியர் தமது "மறைசாட்சி தேவசகாயம" என்ற புத்தகத்தில் இதைப் பற்றி மிக அருமையாகவும் தெளிவாகவும் சுட்டிக் காட்டுகிறார்.

பிராமணர் ஒருவர் தேவசகாயம் பிள்ளையிடம் சவால் விடுத்தார். அரசரும் மக்களும் வழிபடும் கடவுள்களை நீ ஒதுக்கித் தள்ளுகிறாய், இந்த மடமையை உன்னிடமிருந்தும் இந்த கிறிஸ்தவ மதத்தை நாட்டிலிருந்தும் விரட்டாவிட்டால் நான் ஒரு பிராமணன் அல்ல. நான் அணிந்திருக்கும் நூல் புனித பூணூலுமல்ல என்றார். தேவசகாயம்பிள்ளை கொடுத்த பதில் அப்படியா? உன் விருப்பப்படி நீ செய்யாவிடில் உன் பூணூல் என் இடுப்பில் கிடக்கும் அரைஞாண் ஆகும் என்றார்.

தொடரும்..........................

3ம் பக்க தொடர்ச்சி ...

## திருகோணமலை மட்டக்களப்பு ......

அதன் வழி அகில உலக திருச்சபை நம்பிக்கையைப் பற்றி சிந்திப்பதற்கும், அதை மீட்டும் கண்டு கொள்வதற்கும் உந்திதள்ளுவதற்கும் ஒரு உன்னதமான வாய்ப்பாக இது இருக்கும். எனவே நம்பிக்கையின் அடிப்படையான திருமறை நூலைப் பற்றிய ஆழமான அறிவைப் பெறக்கூடிய அனைத்து முயற்சிகளையும் முன்னெடுக்க வேண்டும்.

மேலும் வத்திக்கான் சங்க ஏடுகளை நாம் சரியாக விளக்கி முறையாக நடைமுறைப்படுத்தினால் திருச்சபையைப் புதுப்பிப்பதற்கு சக்தியான கருவியாக இருக்கும் என அழைக்கிறார் (ந.வா 5).

அதனைத் தொடர்ந்து இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மிகமுக்கியகனியாகக் கருத்தப்படும் "கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி" (CCC) எனும் நூலினை – ஒழுங்காகவும், முறையாகவும் அளிக்கப்பட்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையான உள்ளீடுகளை மீண்டும் கண்டறியவும், படிக்கவுமான ஒருங்கிணைந்த முயற்சிகளை இந்த நம்பிக்கையின் ஆண்டிலே முன்னெடுக்கும் படி அழைப்புவிடுக்கிறார் (ந.வா 10).

அத்துடன் காலத்தின் அறிகுறிகளை கண்டறிந்து, ஏழைகள், புறக்கணிக்கப்பட்டோர், மனித உரிமைகளை இழந்தோர் ஆகியோர் மட்டில் அக்கறைகொண்ட நல்லாயனாகிய கிறிஸ்துவைப் பின்பற்றி, அவரது நற்செய்தி விழுமியங்களால் படிப்படியாக உலகையே உருமாற்றி, உள்ளிருந்து புதுப்பிக்கும் தூய ஆவியானவருடன் ஒத்துழைத்து எமது இதயங்களைப் புதுப்பித்து, நம்பிக்கையை ஆழப்படுத்தி உயிர்த்த கிறிஸ்துவின் உயிருள்ள அடையாளங்களாக வாழ அழைப்பு விடுக்கிறார்.

### நம்பிக்கை ஆண்டிற்கான திட்டங்கள்

#### பங்குஅளவில் (குழுமங்கள், சபைகள், இயக்கங்களில்)

- திருச்சபையின் நம்பிக்கை அறிவிக்கப்பட்டு, கொண்டாடப்பட்டு திடப்படுத்தப்படுகின்ற நற்கருணையில் இறைமக்கள் அனைவரும் ஈடுபாட்டுடனும் பயன் தரும் விதத்திலும் பங்கெடுக்கச் செய்ய வழிபாட்டுக் குழுக்கள் மூலம் செயல்பாடுகளை முன்னெடுத்தல்.
- ஆலயத் திருநாட் காலங்களில் இடம்பெறும் மறையுரைகளில் குருக்கள், இரண்டாம் வத்திக்கான் சங்கம், கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஆகியவற்றிலிருந்து ஆதாரங்களைப் பெற்று நம்பிக்கை ஆண்டுக்குப் பொருத்தமான தலைப்புக்களில் தொடர் மறையுரைகள் நிகழ்த்தலாம்.
- குருக்களின் மாதாந்த தியான நாட்களில் கீழ்க்கண்ட தலைப்புக்களை முன்வைத்து உரை வழங்கி குருக்களின் 'தொடர் உருவாக்கத்திற்கு வழிவகுக்கலாம்; உயிர்த்த ஆண்டவரை அறிவித்தல்; 'திருச்சபை மீட்பின் அருட்சாதனம்; 'இன்றையஉலகின் மறைபரப்புப்பணி 'நம்பிக்கையும் நம்பிக்கையின்மையும்; நம்பிக்கை சபைகளின் ஒன்றிப்பு; பல்சமய உரையாடல்; நம்பிக்கையும் நிலைவாழ்வும்; மேய்ப்புப் பணியில் மறைக்கல்வி!
- கிறிஸ்தவ நம்பிக்கைக்கு எதிரான மூட நம்பிக்கையோடு தொடர்புள்ள செயல்பாடுகளைக் கண்டறிந்து அவற்றை இறைமக்கள் விட்டொழிக்க ஆவன செய்தல்.
- பங்குகள் தோறும் இயங்கும் சிறுகுழுக்களான அன்பியங்கள், பக்திச் சபைகள், ஏனைய இயக்கங்களில் வேதியர்கள் சென்று இந்த விலைமதிப்பில்லா ஏடுகளை வாசிக்க அவர்களுக்கு வழிகாட்டி உதவுதல் மூலம் நம்பிக்கையின் சிறு குழுக்களை கட்டியெழுப்ப, ஊக்குவிக்க முடியும்.

#### பங்குத்தந்தையரும், துறவியர்களும், இல்லங்களைச் சந்தித்து நம்பிக்கை வாழ்வைப் புதுப்பித்தல்

- கிறிஸ்தவ நம்பிக்கையில் வளரவும், அதைப் பிறருக்கு அறிவிக்கவும் இறைமக்களுக்கு அன்பியங்களின் வழி பயிற்சியளித்தல். அன்பியங்களிலும் அணுகுமுறை மாற்றங்களை ஏற்படுத்துதல்.
- குடும்பங்களில் செப வேளைகளை விரிவாக்கி அனைவரும் பங்குகொள்ள வழிகாட்டுதல். உதாரணமாக காலையில் துயில் எழும் போது, உண்பதற்கு முன்னும் பின்பும், உறங்கு முன்பு, குடும்ப செபமாலை, விவிலிய வாசிப்பு, போன்றவற்றை நடை முறைப்படுத்தல்.
- பங்குளில் நற்கருணை ஆராதனைக்கான வாய்ப்புக் களை அதிகரித்தல். விசேடமாக முழு இரவு நற்கருணை விழிப்பு வழிபாடுகளை ஒழுங்கு செய்தல்.

#### மறைமாவட்ட அளவில்

- மறை மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து குருக்களுக்கும், துறவியருக்கும், வேதியருக்கும் 2ஆம் வத்திக்கான் சங்கஏடுகள், கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு பற்றிய கருத்தரங்கு பயிற்சிப் பாசறைகளுக்கு ஏற்பாடு செய்தல்.
- இளையோரும் வாழ்வின் பொருள் தேடுவோரும் இந்த ஆண்டிலே நம்பிக்கையின் மகிழ்ச்சியை கண்டு கொள்ளக் கூடியவிதத்தில் நம்பிக்கையின் சாட்சிகளை சந்திக்க, உறவாட சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- மறைமாவட்ட பத்திரிகைகள் மூலம் நம்பிக்கை பற்றிய அனைத்து விடயங்களையும் பிரசுரித்தல். வீட்டுக்கொரு பத்திரிகை வாங்கிப் படிக்க ஊக்குவித்தல்.
- மறைக்கல்வி நடுநிலையம் வருடாவருடம் நடத்தும் விவிலியப் போட்டிப் பரீட்சைகளில் 2ஆம் வத்திக்கான் சங்க ஏடுகள், கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு ஆகியவற்றிலிருந்தும் வினாக்கள் எடுக்கப்படல்.
- மறைமாவட்டத்தில் உள்ள ஒதுக்கப்பட்டோர், கவனிப்பாரற்றோர், எழைகள், கைம்பெண்கள, அநாதைகள் ஆகியோருக்கான நிலையான மறுவாழ்வுத் திட்டமொன்றை முன்னெடுத்தல்.

> நம்பிக்கை வாழ்வைக் குணமாக்கும் மருந்து.
> நம்பிக்கை மனிதரில் இறைமையைக் காணும் கண்ணாடி.
> நம்பிக்கை இருப்பையும் எதிர்காலத்தையும் தாங்கும் சுமைதாங்கி.
> நம்பிக்கை உறவையும் வழிபாட்டையும் சமயமாக்கும் கல்விக்கூடம்.
> நன்றி - ("நம்பினால்" புத்தகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமாற்றத்தின் காலம்

## திருவழிபாட்டு ஆண்டென்றால் என்ன?

காலம் மனித வாழ்வோடு தொடர்புடையது. வரலாற்றில் ஒரு காலத்தில் அவன் தோன்றுகின்றான். மற்றொரு காலத்தில் அவன் மறைகின்றான். இறைவன் காலங்களை எல்லாம் கடந்தவர், இருப்பினும் அவர் வரலாற்றுக்குப் புறம்பானவர் அல்ல. காலம் நிறைவுற்ற பொழுது மனுவுடல் எடுத்து காலத்திற்க்கு உட்பட்டவரானார் (கால4:4), இந்த கிறிஸ்து தம்முடைய பாடுகள், மரணம், உயிர்ப்பு (பாஸ்கா மறைபொருள்) வழியாக மீட்பை தம் கொடையாக நமக்கு ஈந்தார். எமது வழிபாட்டின் வல்லமை என்பது இயேசு கிறிஸ்துவின் இறப்பு, உயிர்ப்பு என்ற மறை பொருளைக் கொண்டாடுவதில் தான் அடங்கியுள்ளது. இப் பாஸ்கா மறைபொருளை 'ஓர் ஆண்டு'கால வட்டத்தில் நினைவு கூரவும், மீண்டும் பிரசன்னப்படுத்தவும், மீண்டும் செயல்படுத்தவும் இதனூடாக இறைவனின் அளப்பரிய கொடைகளை பெற்று மகிழவும் திருச்சபை ஏற்பாடு செய்து தந்துள்ளது. இதனையே நாம் திருவழிபாட்டு ஆண்டென்கின்றோம்.

## ஏன் மீண்டும் மீண்டும் ....?

ஒரு தேசம் தன்னுடைய விடுதலை நாளை வருடந்தோறும் கொண்டாடு கிறது. ஒரு தியாகியின் இறப்பு தினம் ஆண்டுதோறும் நினைவு கூறப்படுகிறது. ஏன்? இவை நம்மை பாதிக்க வேண்டும், செயல்பட உந்த வேண்டும், அது எம் வாழ்வை மாற்ற வேண்டும். அது போன்றே இயேசு கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளை மீண்டும், மீண்டும் ஆண்டு முழுவதும் கொண்டாடுகின்றோம். ஏனெனில் அதன் மறையுண்மையை நாளுக்கு நாள் ஆழமாக கற்றுத் தெளிய அதன் தாக்கம் எம் வாழ்வில் பாதிப்பை தாக்கத்தை ஏற்படுத்த கொண்டாடு கின்றோம். இயேசுவின் வாழ்வு என் வாழ்வாக வேண்டும், இயேசுவின் மதிப்பீடுகள் என்னுடைய மதிப்பீடுகளாக வேண்டும், சுருக்கமாக சொன்னால் நாம் புதுப் படைப்பாக மாறவேண்டும். எனவே மீண்டும் கொண்டாட வேண்டும்.

## தவக்காலமென்றால் என்ன?

மக்கள் தாங்கள் விரும்புகின்ற நலனைப் பெற, தங்கள் பாவத்திற்கு பரிகாரம் தேட தவம் செய்வதை நாங்கள் எல்லா சமயங்களிலும் பார்க்கின்றோம். இறைவனோடு ஒன்றரக் கலந்திட தவசிகள் கானகம் சென்று கடுந்தவம் புரிந்த தையும் அறிந்திருக்கின்றோம். மேலும் பழைய ஏற்பாட்டில் யோனா இறைவாக் கினரின் போதனையைக் கேட்ட நினிவே மக்கள் 40 நாள் கடுந்தவம் புரிந்தனர். இதன் விளைவாக தங்களுக்கு ஏற்படவிருந்த அழிவிலிருந்து காப்பற்றப்பட்டனர். தவம் வாழ்வுக்கு வழி சமைக்கிறது. தவக்காலத்தில் நம்மை பக்குவப்படுத்து கின்றோம். இது இறையருளின் காலம், தீமையின் ஆதிக்கம் நீக்கப்பட்டு இறைவன் தரும அருளின் பண்புகளை உணர்ந்து இறைவனின் உறவில் வளர, மேலும் உயிர்ப்புத் திருவிழாவிற்கு நம்மையே தயாரிக்கும் காலம் தவக்காலம்

மேலும் உயிர்ப்பு திருநாளுக்கு ஆரம்பத்தில் மூன்று நாட்கள் தான் தயாரிப்புக்கள் நடந்தன, காலப்போக்கில் 40 நாட்கள் தயாரிப்பு நாட்களாக உருவாகின.

## ஏன் 40 (இலக்கம்) நாட்கள்?

1. நோவா காலத்து பெருவெள்ளம் 40 நாட்கள் நீடித்தது.
2. இஸ்ராயேல் மக்கள் பாலைநிலத்தில் 40ஆண்டுகள் பயணம் செய்தனர்.
3. எலியா இறைவாக்கினர் 40 பகலும், இரவும் உண்ணா நோன்பிருந்தார்.
4. மோசே சீனாய் மலையில் 40 நாட்கள் உண்ணா நோன்பிருந்தார்.
5. நம் ஆண்டவர் இயேசு பாலைநிலத்தில் 40 நாட்கள் உண்ணா நோன்பிருந்தார்.

ஆகவே 40 என்ற குறியீடு ஒரு முக்கிய நிகழ்வுக்கு ஆயத்தம் செய்யும் காலமாக கணிப்பிடப்பட்டது. அந்த விதத்தில் ஆதித்திருச்சபையில் உயிர்ப்பு பெரு விழாவின் போது திருமுழுக்கு பெறும் நபர்களுக்கு 40 நாட்கள் தீவிர தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து திருமுழுக்கு பெற்றவர்களும் தங்கள் திருமுழுக்கு வார்த்தைப்பாட்டை புதுபித்துக் கொள்ளும் நோக்குடன் தவக்காலத்தில் தயாரிப்புக்களை மேற்கொண்டனர்.


## தவக்காலம்

இம்முறை நான் என் குடும்பத்தாரோடு ஒவ்வொரு நாளும் ஓர் குறிப்பிட்ட நேரத்தில் செபிக்கப் போகின்றேன். கூடுமான வரை நாளாந்த திருப்பலியில் பங்கேற்கப் போகின்றேன். இக்காலத்தில் கூடிச் செபிக்கும் போது இறை வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கப் போகின்றேன். இறைவார்த்தையின் ஒளியில் என் வாழ்வை மாற்றிட என்னை கையளிக்கப் போகின்றேன்.

மேலும் இத்தவக்காலத்தில் நான் நோன்பு இருக்க போகின்றேன். வெறுமனே உணவை தவிர்த்து, மற்றும் மாமிச தவிர்ப்பு மாத்திரம் தான் நான் மேற்கொள்ளப்போகும் நோன்பென்றால் அது முழுமையானது அல்ல. **(lent is more than diet, lent is spiritual benifit)** எனது நோன்பு உடலுக்கு மாத்திரமல்ல என் உள்ளத்திற்கும் மருந்தாகிட வேண்டும். எனது சீடத்துவ வாழ்க்கையில் கிறிஸ்து என்னில் வளர்வதற்கு தடையாக வாழ்க்கையில் இருக்கக்கூடிய சிந்தனைகள், செயற்பாடுகள், மற்றும் அன்றாட வாழ்வை மாற்ற வேண்டும். நான் மேற்கொள்ளும் நோன்பு என் ஆன்மீக வாழ்வை வளப்படுத்த ஊன்று கோலாக இருக்க வேண்டும்.

ஈற்றில் இயேசுவின் பாடுகளை மற்றும் அவர் மரணத்தை தியானிக்கும் இக்காலத்தில் நான் மற்றவர்களுக்கு உதவி புரியப் போகின்றேன் எனது பணம், நேரம், ஆற்றல், திறமைகளையும் பகிரப்போகின்றேன் இவற்றை மற்றவர்களிடம் தாராளமாகவே மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளப் போகின்றேன். இம்மூன்று செயற்பாடுகள் வழியாக நான் என்னுள் புதைந்து கிடக்கும் கிறிஸ்துவை வெளிக்கொணர தூய ஆவியின் ஆளுகைக்கு என்னை கையளிக்கப் போகின்றேன் தூய திருமுழுக்கு யோவான் கூறுவது போல் இயேசு என்னில் பெருக வேண்டும் நான் குறைய வேண்டும். இதுவே என் பேராவல், இதுவே என் இலக்கு.

**அருட்பணி எஸ்.அந்திரியாஸ் ஏ.பெர்ணாண்டோ. அ.ம.தி**



# Hai குட்டீஸ்

இது உங்களுக்கான பகுதி......

**விவிலியப் புதிர் போட்டி எண்–1**



1. திருவிவிலியத்தில் எத்தனை புத்தகங்கள் உள்ளன ?
2. பழைய ஏற்பாட்டிலுள்ள புத்தகங்கள் எத்தனை?
3. புதிய ஏற்பாட்டிலுள்ள புத்தகங்கள் எத்தனை?
4. ஆதாம் என்பதன் பொருள் யாது?
5. ஏதேனின் சிறப்புமிகு நான்கு ஆறுகளும் யாவை?
6. தொடக்கத்தில் உருவாக்கப்பட்ட திருவருட்சாதனம் எது?
7. சேத்து பிறந்த பின் ஆதாம் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?
8. நோவா என்று ஏன் பெயரிட்டான் இலாமேக்கி?
9. நோவாவின் பேழை செய்யப்பட்ட மரம் யாது?
10. நோவாவின் பேழையின் நீளம்,அகலம்,உயரம் எத்தனை முழம்?
11. மண்ணுலகில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது நோவாவிற்கு வயது எத்தனை?
12. பாபேல் என்று ஏன் அழைக்கப்பட்டது?
13. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே கடவுள் ஏற்படுத்திய அடையாளம் எது?
14. இறைவானால் சபிக்கப்பட்ட மனிதன் யார்?
15. நோவாவின் தந்தை யார்? எவ் வழிமரபினர்?

அனுப்ப வேண்டிய முகவரி: -விவிலிய புதிர் போட்டி எண் - 1

ஆசிரியர்
திருமலைத்தீபம்
இல:297,டொக்கியாட் வீதி
திருகோணமலை.

1ம்பரிசு-300/= ரூபாய் 2ம்பரிசு-200/=ரூபாய் 3ம்பரிசு-100/=ரூபாய்

பதில்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.03.2013.

# நம்பிக்கை ஆண்டே வருக!

என்றோ நாம் பெற்ற திருமுழுக்கில்
பெற்றிட்ட நம்பிக்கையெனும்
கொடை வளர்கின்றது எம்மில்.
வளரும் நம்பிக்கைக்கு
நீரூற்ற துடிக்கின்றது திருச்சபை.
ஈராயிரத்துப் பத்து மூன்றை
பகிர்ந்து தந்துள்ளது நம்பிக்கைக்காக.
இறைமக்கள் ஒவ்வொருவரிலும்
உதயமாக வேண்டிய நம்பிக்கை
இன்று அமாவாசை இருளாய் பிறையாய்
மாறுவது கண்கூடு.
மாறுபட்ட கருத்துகள்
கிறிஸ்தவ மோதல்கள்
விசுவாசத்திற் கெதிரான சவால்கள்
வித்திடுகின்றன அவநம்பிக்கைக்கு.

நம்பிக்கை வளர
கரம் நீட்டியுள்ள இவ்வாண்டை
பற்றிக் கொள்வோம்.
அழிந்து செல்கின்ற நம்பிக்கை
விதையை நீரூற்றி வளர்ப்போம்.
அணைந்து போகின்ற நம்பிக்கை
தீபத்திற்கு எண்ணெய் வார்ப்போம்.
நம்பிக்கை ஆண்டே வருக!
எம் இதயங்களில் குடி கொள்க.
இவ் வருடம் மட்டுமல்லமால் - எம்
ஆன்மீக வாழ்வு முழுவதும்
இறை நம்பிக்கை மிளிர
இறைவரம் வேண்டுவோம்.

**க.கியூரி உவர்மலை**

# நம்பினால்...

இறைவனின் படைப்பாற்றலைக் காணலாம்....
இறைவனின் உடன் இருப்பை காணலாம்...
இறைவனின் வழி காட்டுதலைக் காணலாம்...
இறைவனின் மீட்பைக் காணலாம்...
மனிதனில் இறைவனையே காணலாம்...
இறையன்பிலும் பிறரன்பிலும் வாழலாம்....
சமூகத்தில் உள்ள தீமையை மாற்றலாம்...
திருச்சபையில் இயேசுவின் மீட்புத் தொடர்வதைக் காணலாம்...
கிறிஸ்தவ மறையுண்மைகளுக்கு விளக்கம் பெறலாம்...
வழி வழியாய் பெற்ற கிறிஸ்தவ நம்பிக்கையை வாழலாம்...
இயேசு நற்கருணையில் வாழ்கிறார் எனக் காணலாம்....
செபிக்கும் செபங்களுக்கு விளக்கம் காணலாம்...
இயேசுவின் வல்லமையைக் காணலாம்....
இயேசுவின் உதவியுடன் உலகை மாற்றலாம்...
இறையாட்சியை இந்த மண்ணில் காணலாம்...
பிறர்மீது கொண்டுள்ள நம்பிக்கையில் வளரலாம்...
தன்னம்பிக்கை கொண்டு இறை வழிநடத்தலில் பயணிக்கலாம்...
இயேசுவை முழுமையாய் அறியலாம்...
இயேசுவின் அப்பா-அனுபவம் பெறலாம்...
இயேசுவை அனைவருக்கும் அறிவிக்கலாம்...
இவ்வாறு இறையாட்சியை நம்மிடையே நம்மில் காணலாம்...

நன்றி - ("நம்பினால்"-புத்தகம்)


ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| 01. | Fr.S.மதுராங்கன் குரூஸ் | (மறைக்கல்வி நிலையம்) |
| 02. | திருமதி ஆஞ்சலின் சுப்பிரமணியம் | (பேராலயம்) |
| 03. | செல்வன் கோ. மனோகரதாஸ் | (குவாடலூப்பே) |
| 04. | செல்வி ந.நவக்கியூரி | (உவர்மலை) |
| 05. | திரு ஜி.அல்பேட் | (பாலையூற்று) |
| 06. | செல்வி. ஜே.கிறிஸ்சாந்தா குரூஸ் | (மறைக்கல்வி நிலையம்) |
| 07. | திரு. ம.இ.ஜெகதீசன் குரூஸ் | (மூதூர்) |
| 08. | கணணி அமைப்பு செல்வி S.ரேனுஜா | (மறைக்கல்வி நிலையம்) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க சபைகளின் பொது ஒளிவிழா 2012





திருகோணமலை மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க சபைகளின் பொது ஒளி விழா 22.12.2012 அன்று தூய மரியாள் பேராலயத்திலுள்ள கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக எமது மறைமாவட்டத்தின் ஆயர் அதி.வந்.கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை பங்கேற்று சிறப்பித்தார். அத்துடன் எமது மறை மாவட்டத்தில் பணிபுரிகின்ற அனைத்து குருக்களும் அப்போஸ்தலிக்க சபைகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ் ஒளி விழாவை திருகோணமலை மறைமாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி S.S.ஜோன்பிள்ளை அவர்களின் தலைமையில் இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# தூய குவாடலூப்பே அன்னை திருத்தல பங்கு நிகழ்வுகள்



## கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் 20வது ஆண்டு நிறைவு தினம்

தூய குவாடலூப்பே அன்னை திருத்தலத்தின் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் 20வது ஆண்டு நிறைவை மிகவும் சிறப்புடன் 20.12.2012 அன்று கொண்டாடப்பட்டது. இவ் விழாவிற்கு அருட்பணி மு. சுகுனேந்திரன் குரூஸ் பிரதம விருந்தினராக பங்கேற்று சிறப்பித்தார்.

# நடமாடும் கரோல்



18.12.2012 தொடக்கம் 22.12.2012 வரை தூய குவாடலூப்பே அன்னை திருத்தல பங்குத் தந்தை அருட்பணி S.S.ஜோன்பிள்ளையின் தலைமையில், 22ம் படைப்பிரிவின் அனுசரணையுடன் திருகோணமலை மறைமாவட்டத்தில் எல்லா இடங்களுக்கும் சென்று நத்தார் பாப்பாவுடன் ஆடிப்பாடி கிறிஸ்துவின் பிறப்புச் செய்தியை எல்லா இன மக்களுக்கும் அறிவித்தனர்.

**தகவல் :- மனோகரதாஸ்**

# புதிதாக திறக்கப்பட்ட முத்திபேறு பெற்ற யோசேவாஸ் சிறிய குருமடம்



அதிபர்:- அருட்தந்தை செ.சுகுனேந்திரன் குரூஸ் இக்குருமடத்தில் உள்ள 13 மாணவர்களும் பெரியகடை, சின்னக்கடை, உவர்மலை, மூதூர், சீனன்குடா,ஆகிய பங்கைச் சேர்ந்தவர்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இக் குருமடத்திற்கு உதவி செய்ய விரும்பும் **நலன் விரும்பிகள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்:—0771555076**

# சோமஶ்ரீ தேசமானிய விருது    சோமஶ்ரீ தேசகீர்த்தி விருது





2004ம் உயிர்களை காவுகொண்ட சுனாமிப்பேரலையின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பெரியகல்லாறு மக்களுக்கு பொருளாதார, சமூக, கல்வி பணிகளை திறன்பட ஆற்றி வந்தமைக்காகவும், 2008 - 2010 வரை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மூதூர் மக்களை மீள்குடியேற்றம் செய்தமைக்காகவும், கல்வி வளர்ச்சிக்கு உதவியமைக்காகவும், அருட்பணி S.S.ஜோன்பிள்ளை அவர்களுக்கு அகில இன நல்லுறவு ஒன்றியம் **சோமஶ்ரீ தேசமானிய** என்ற விருதை வழங்கியது. அத்துடன் அவருடைய சகோதரர் S.S. அந்தோனிப்பிள்ளை அவர்கள் 1983ம் ஆண்டிலிருந்து மேற்கொண்ட சமூகப் பணிகளுக்காக **தேசகீர்த்திய** என்ற விருதும் 28.01.2013 அன்று கொழும்பில் வழங்கப்பட்டது. இவர்களுடைய இவ்விதமான பணிகள் மென்மேலும் தொடர திருமலைத்தீபம் தன் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது.

# மூதூர் தூய அந்தோனியார் ஆலயப் பங்கு நிகழ்வுகள்

**முதல் நன்மை**

கடந்த 30.12.2012 அன்று காலை பத்தொன்பது சிறார்களுக்கு முதல் நன்மை கொடுக்கப்பட்டது. பங்குத்தந்தை தலைமையில் அருட்பணி எல். பிலிப் அடிகளாரும் கலந்து சிறப்பித்தார்.

**ஒளிவிழா**

22.12.2013 மூதூர் ஞானபிரகாசர் மண்டபத்தில், மறைக்கல்வி மாணவர்களுக்கான ஒளிவிழா நடைபெற்றது. இதற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் மதிப்பிற்குரிய ஜனாப் நஜீப் அப்துல் மஜீத் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், மூதூர் பொலீஸ் அத்தியட்சகரும், பிரதேச செயலாளரும் கலந்து சிறப்பித்தனர். இவ் ஒளிவிழா மறையாசிரியர்கள் தலைமையில் இடம்பெற்றது.

*தகவல் :- பங்குத்தந்தை அருட்பணி யூ.போ. ஜொனந்தன்*







# நம்பிக்கை ஆண்டு சின்னத்தின் விளக்கம்

படகு / திருச்சபை

பாய்மரம் / சிலுவை

IHS இந்த அடையாளம் இயேசு என்ற திருநாமத்தைக் குறிக்கும் ஒரு அடையாளமாகும். இது இயேசு என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து "IHSOUS" (IHZorZ) எடுக்கப்பட்டுள்ளது. இது இயேசு மனுக்குலத்தின் மீட்பர் "Iesus Hominum Salvator" என்ற பெயரையும் தாங்கியுள்ள ஓர் அடையாளமாகும்.

சூரியன்/நற்கருணை

உலக சமுத்திரத்தில் திருச்சபை பாய்மரப் படகினை திருச்சிலுவை பாய்கட்டி திவ்விய நற்கருணை ஆதவனால், ஒளி நிறைந்த நம் நம்பிக்கை வாழ்வினை வான்வீடு கரை சேர்ப்போம். வா!

இப்பத்திரிகை திருமலையில் உள்ள மறைக்கல்வி நடுநிலையத்தில் வடிவமைக்கப்பட்டு திருகோணமலை அஸ்ரா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடட் இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org